Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-64 வைகாசி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

# முள்ளிவாய்க்கால் திரட்சியை ஆக்க சக்தியாக மாற்றுவதே காலத்தின் தேவை



- தையிட்டியிலும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலம்
- முதாளர் அரங்கு ஏன் முக்கியமானது?
- தேசிய இனப்பிரச்சனையும் சாதியமும்

ஆய்வு—அறிவு—நிமிர்வு

# நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு குடிமக்கள் சமூகத்தின் பங்கேற்பு அவசியம்




அமுது

வடமாகாண நீர்வளம் சார்ந்த உரையாடல் வட்டத்தின் ஒரு பகுதியாக 'நல்லூர் நீர்வள உரையாடல்' நல்லூர் பிரதேச சபை அரங்கில் 25.03.2023 சனிக்கிழமை மாலை இடம் பெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் வட மாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டமும் - இளைய நீர்த்துறையாளர் - வடக்கு வட்டமும் இணைந்து நடாத்திய உரையாடலில், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட உள்ளவர்கள், நீர் சார் ஆர்வலர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இணைந்து கலந்துரையாடினர். ஏற்கனவே இவ்வுரையாடல் வட்டம் கடந்தாண்டு கார்த்திகை மாதம் 22 ஆம் திகதியும், இவ்வாண்டு தை மாதம் 12 ஆம் திகதியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் நீர்வள உரையாடலின் பின் குறித்த செயற்திட்டத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரான பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா அவர்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

வட மாகாணத்தினுடைய நீர் பாதுகாப்பு, அதனை தொலைநோக்குப் பார்வையில் உறுதிப்படுத்துவதற்கு தேவையான முயற்சிகள், அதற்குத் தேவையான தரவுகளை திரட்டுதல், அந்தத் தரவுகளின் அடிப்படையில் முடிவெடுக்கின்ற அரச அலகுகளுடைய தீர்மானங்களுக்கு அனுசரணையாக இருத்தல், தண்ணீரின் நெருக்கடி நிலையை அதிலும் நிலத்தடி நீரின் நெருக்கடி நிலையை வட மாகாணம் முழுவதுக்குமான ஒரு பார்வையில் பள்ளி மாணவர்கள் தொடக்கம் வீட்டு தலைவிகள் வரையிலுமாக முன்னர் இருந்ததை விடவும் மிகவும் தெட்ட தெளிவாக அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுதல். இவை எல்லாம் இன்று நாம் உடனடியாக செய்ய வேண்டியவை.

பல தசாப்தங்களாக இங்கே முன்னோடிகளாக இருந்த தலைசிறந்த தொழில்நுட்ப பொறியியலாளர்கள், இத்துறையைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், சிந்தனையாளர்கள் எழுதி வைத்து விட்டு சென்றிருக்கிறார்கள். அவர்களது சிந்தனைகள், செயற்றிட்டங்கள் யாழ் கடல் நீர் ஏரியை நன்னீர் ஏரியாக மாற்றக்கூடிய வழிமுறைகள், யாழ்ப்பாணத்திற்கு ஒரு ஆறு (River for Jaffna) என்ற வழிமுறை என்பவற்றை எல்லாம் திரட்டினோம். அவை தந்த கேள்விகளையும் அறிவுகளையும் ஒன்று சேர்த்த பின்னர், நான் முதல் கூறிய அத்தனையையும் ஒரு குறிப்பிட்ட அவகாசத்திற்குள் செய்து முடிப்பதற்காக யாழ். பல்கலைக்கழகம் ஒரு செயல்திட்டத்தில் இறங்கியது.

2020 பங்குனி மாதம் 12 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் 'வட மாகாண

த்தின் நீர் பாதுகாப்பினை மக்களை ஒன்றிணைத்து செய்கின்ற ஆய்வுத் திட்டத்தின் மூலம் நடத்துதல்' (Water Security through Participatory Action Research in the Northern Province of Sri Lanka, WASPAR) என்ற பெயரில் ஒரு செயல்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பல்வேறு அறிவுத் துறைகளைச் சேர்ந்தவர்களினதும், மருத்துவபீடத்தில் உள்ள சமூக உடல் நலவியல் துறையைச் சேர்ந்தவர்களினதும் வழிநடத்தலில் இந்த செயல்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கான அணுகுமுறையை வரைந்து கொடுத்ததன் காரணமாக என்னையும் அழைத்து இருந்தார்கள். அதைத் தொடர்ந்து வந்த கோவிட் காலத்தில் அது படிப்படியாக நகர்ந்து தற்போது அது அடைய வேண்டிய இடத்தை சரியான நேரத்தில் அடைந்திருக்கின்றது.

வடமாகாணத்தின் நீர்நிலை சார்ந்து அத்தனை பதிவுகளும் ஒன்று சேர்க்கப்பட்டு, எண்ணிமைப்படுத்தப்பட்டு, சேமிப்பகம் (Repository) ஒன்றில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நாம் எதையும் அந்த சேமிப்பகத்தில் தேடுதல் மூலம் தேடிக் கொள்ளக் கூடிய வகையில் வகைப் படுத்தப்பட்டுள்ளது. அது ஒரு பெறுபேறு.

சமூகத்தில் இவ்விடயங்களில் அக்கறை போதுமான அளவு இல்லாமல் இருக்கின்றது. இந்த பின்னணியில் நீர்வளத்தை காப்பதற்கான எந்த ஒரு விடயத்திலும் குடிமக்களையும் தலைவர்களையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போகின்ற தேவை இருக்கின்றது. அவர்களுடைய பங்களிப்புடன் ஏற்படுகின்ற முடிவுகள் நல்ல முடிவுகளாக நீண்டகால தேவைகளை நிவர்த்தி செய்கின்ற முடிவுகளாக இருக்க வேண்டும் என்பதற்காக அதற்கான ஒரு உரையாடல் வட்டம் (Dialog forum) நிறுவப்பட்டுள்ளது. இது இரண்டாவது பெறுபேறு.

மூன்றாவது பெறுபேறு, இவை இரண்டும் சேரும் போது செய்யப்பட வேண்டிய ஆய்வு, பகுப்பாய்வு (Research) என்பவற்றுக்கான வழி மூலம். தற்போது வடமாகாணத்தில் இரண்டு பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. ஒன்று யாழ். பல்கலைக்கழகம், மற்றையது வவுனியா பல்கலைக்கழகம். இரண்டிலும் உள்ள அறிவுத் துறையின் பங்களிப்புடன் இந்த ஆய்வுத் திட்டங்கள் மாணவர்களுடைய ஆய்வுகளாகவும் பேராசிரியர்களின் ஆய்வுகளாகவும் வருவதற்கு இது வழி சமைத்து கொடுக்கும்.

இன்னுமொரு விடயம் இங்கே முக்கியமானது. இந்த ஆய்வின் ஒரு பகுதியாக இங்கே வெளியாகும் முக்கிய தினசரிகளில் நீர் சார்ந்த செய்திகள், பதிவுகள், கட்டுரைகள் எத்தனை வெளியாகி இருக்கின்றன என்பதனை ஒவ்வொன்றாக பார்த்தபோது அதிர்ச்சியாக தான் இருந்தது. கடந்த சில வருடங்களில் ஒரு சில கட்டுரைகள் மாத்திரமே வெளியாகி இருந்தன. நீர் சார்ந்த விளம்பரங்கள் அதிகளவு வெளியாகி இருந்தன. குறித்த ஆய்வு முடிவுகள் தொடர்பில் இங்குள்ள பத்திரிகை ஆசிரியர்களுடன் கலந்துரையாடப்பட்டு நீர் சார்ந்த கட்டுரைகளை அதிகரிப்பது தொடர்பில் பேசப்பட்டது.

நாம் இந்த மூன்று பெறுபேறுகளையும் ஏதோ ஒரு வகையில் நல்லூர், கோப்பாய், அக்கராயன் என்கின்ற மூன்று பிரதேச சபை நிலப்பரப்புகளிலும் நிறைவேற்றி இப்பொழுது இதனுடைய விளிம்பை வந்தடைந்திருக்கின்றோம். வடக்கின் நீர் வளத்திற்கான உரையாடல் வட்டம் உருவாக்கப்பட்டு நான்கு மாதங்களில் நான்கு தடவைகள் சந்தித்து இருக்கின்றோம். அந்த உரையாடல் வட்டத்தில் பல்வேறு துறை சார்ந்தவர்களும் பல்வேறு அரசியல் துறைகளில் உள்ள பொறுப்பாளர்களும் மக்கள் குழுக்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் விவசாய சம்மேளனங்களும் பெண்கள் அமைப்புகளும் ஊடகவியலாளர்களும் ஆக 40 பேர் அளவில் இருக்கின்றோம். கிரமமாக இக்கூட்டத்தில் பங்கேற்று நல்ல முடிவை நோக்கி ஆரோக்கியமான உரையாடலை நடத்திக் கொள்வதற்காக பயிற்சி செய்து, கற்றுத் தேர்ந்து வருகிறோம்.

பொதுவாக இவ்வாறான உரையாடல்கள் தானாக நிகழ்வது இல்லை. எல்லோரும் அதற்கு ஆயத்தமாக இல்லை. அதை யாரோ ஒருத்தர் முன்மொழிந்து வழிநடத்தி கொண்டு செல்ல வேண்டும் என்பதை இப்போதைக்கு நான் ஏற்றுக் கொள்கிறேன். அதில் பயிற்றப்பட்டவனாக நான் இருக்கின்ற காரணத்தால் அதை நீங்கள் பயின்று கொண்டால் எல்லோரும் அதனை நடத்தலாம். சமூகத்திற்கு இதனால் நிறைய நன்மைகள் கிடைக்கும்.

(12 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

# முள்ளிவாய்க்கால் திரட்சியை ஆக்க சக்தியாக மாற்றுவதே காலத்தின் தேவை

அடுத்த ஆண்டு பதினைந்தாவது முள்ளிவாய்க்கால் நினைவு நாள் அனுட்டிக்கப்பட போகிறது. எங்கள் மக்களும் பெருமளவில் திரள்வார்கள். தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி பொதுச் சுடர்களை ஏற்றுவார்கள், கண்ணீரை காணிக்கையாக்குவார்கள், மலர்த்தூவி அஞ்சலி செய்வார்கள் பின் கலைந்து செல்வார்கள். கடந்த 14 ஆண்டுகளாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் இவ்வாறாகத் தான் வெறுமனே ஒரு சடங்காக இடம்பெற்று வந்துள்ளது. முள்ளிவாய்க்காலில் திரளும் பெரும் மக்கள் திரட்சியை எவ்வாறு ஆக்க சக்தியாக மாற்றப் போகிறோம். ஒவ்வொரு வருடமும் திரண்டு பின் கலைந்து செல்லும் இனமாக போகிறோமா? இதனை ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இன்று தமிழ் மக்களின் நிலங்கள் வேகமாக பௌத்த மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறீலங்கா அரசின் தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக தமிழர்களுக்கு சொந்தமான நிலங்கள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன.

இன்னொரு பக்கம் தமிழ் இளையோரை போதைப்பொருள் எனும் படுகுழியில் வீழ்த்தும் திட்டமிட்ட இனவழிப்பு தொடர்ந்து வருகிறது. போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய சரியான பாதை வகுக்கப்படவில்லை. வெறுமனே சர்வதேசம் அதை செய்யும் இதை செய்யும் என்று குருட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு வருடமும் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு இனமாக, தேசமாக என்ன செய்யப் போகின்றோம்? இந்த ஆண்டு இந்த வேலைத்திட்டத்தை தமிழினம் நடைமுறைப்படுத்தப் போகிறது என்று முள்ளிவாய்க்காலில் உறுதியெடுத்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்களும் இணைந்து குறித்த வேலைத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். இது தான் இப்போது தேவையாக உள்ளது.

குறிப்பாக முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரங்கள் இன்று என்ன நிலையில் உள்ளன, போரால் பாதிப்புற்று வறுமை நிலையிலுள்ள குடும்பங்களை சேர்ந்த குழந்தைகளின் போசாக்கு, கல்வி எதிர்காலம் என்ன? பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை என்ன? அரசியல் கட்சிகளையும் தாண்டி பொருத்தமான சிவில் சமூக கட்டமைப்பை ஏற்படுத்துவது எவ்வாறு? தமிழர் பகுதிகளில் சிறீலங்கா அரசால் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கலை எவ்வாறு எதிர்கொள்வது? தமிழ் மக்கள் தங்கள் வெளியுறவுக் கொள்கையினை கட்டமைப்பது எவ்வாறு? பொருளாதார கொள்கைகளை வகுத்து எவ்வாறு மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தப் போகின்றோம்? தமிழ் மக்களுக்கான அவர்கள் விரும்பும் தீர்வுத் திட்டத்தை எவ்வாறு அடையப் போகின்றோம்? இவ்வாறான பலவற்றுக்கான சரியான செயற்பாட்டு அணுகுமுறைகளை தேட வேண்டியுள்ளது.

இதற்கான சரியான பொறிமுறை, கால அளவு போன்றவற்றை துல்லியமாக கணக்கிட்டு செயற்படுத்த வேண்டும்.

மக்கள் போராட வீதிக்கு வரவில்லை என்று குறை கூறுகிறோம். மக்கள் திரளாக இல்லை என்கிறோம், சமூகம் சமூகமாக இல்லை தனித்தனியாக இருக்கிறார்கள் என்கிறோம். எல்லாவற்றுக்கும் அப்பால் தமிழ் மக்கள் மே 18 முள்ளிவாய்க்காலிலும், நவம்பர் 27 மாவீரர் தினமன்றும் தன்னியல்பாக பெரும் எழுச்சியுடன் திரள்கின்றார்கள்.

இந்த திரட்சியை ஆக்க சக்தியாக மாற்றி ஈழத்தமிழினம் தங்களை இத்தீவில் தக்க வைக்க உரிய திட்டங்களை தீட்டி முன்நகர்த்துகின்ற நாட்களாக அவற்றை கொள்ள வேண்டும். தனியே "அதை செய்ய வேண்டும், அப்படி கட்டமைப்பை உருவாக்க வேண்டும்" என்று பேசிக் கொண்டிருக்காமல் செயற்படுகின்ற செயலூக்கத்தை நோக்கி செல்கின்ற கால கட்டம் வந்து விட்டது. இவற்றை எல்லாம் செய்வதற்கு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த விவகாரங்களையும் கையாளக் கூடிய சிவில் சமூக கட்டமைப்பு ஒன்றை தமிழர் தாயகம் தழுவிய ரீதியில் உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

-சி. கிரிசாந்-

# மலையக தமிழ் மக்களும் நான்கு கோட்பாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியமும்

சி.அ.யோதிலிங்கம்



1947 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற போது அந்த தேர்தலில் மலையகத்தில் இருந்து 7 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். இலங்கை இந்திய காங்கிரஸ் இல் இருந்து 6 பிரதிநிதிகளும் சுயேட்சையாக ஒரு பிரதிநிதியும் தெரிவு செய்யப்பட்டார். அதேவேளை 20 இற்கும் மேற்பட்ட இடதுசாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு மலையக மக்களினுடைய வாக்குகள் காரணமாக இருந்திருக்கிறது. இது கண்டிய சிங்களவர்களுடைய ஆதிக்கத்திற்கு மலையகத்தில் இடைஞ்சலாக இருக்கும் என்று தான் 1948 ஆம் ஆண்டு முதலில் பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து 1949 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டமும் அதே ஆண்டு தேர்தல்கள் திருத்த சட்டமும் கொண்டு வரப்பட்டு மலையக மக்களினுடைய வாக்குரிமையும் இல்லாமல் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் மலையக மக்கள் ஒரு பிரதிநிதித்துவ அரசியலின் பலன்களை அனுபவிக்க முடியாத ஒரு மோசமான இருட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள்.

1977 ஆம் ஆண்டின் பின்னர் நுவரெலியா மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் மூன்றாவது உறுப்பினராக தொண்டமான் தெரிவு செய்யப்பட்டார். அதற்கு பிறகு தான் மலையக மக்களினுடைய பிரதிநிதித்துவ அரசியல் வளரத் தொடங்கியது. 1989 ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணி தோற்றம் பெற்ற பின்னர் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக கொள்கின்ற ஒரு போக்கு வளரத் தொடங்கியது. ‘மலையகம் எமது தாயகம், நாம் ஒரு தேசியம்’ என்கின்ற கோசங்கள் எல்லாம் எழுச்சி அடைய தொடங்கின. இதற்கு பிறகு இவ்வளவு காலமும் ஒரு தொழிற்சங்க அரசியலோடு கட்டுப்பட்டு இருந்த மலையக அரசியல் ஒரு தேசிய இன அரசியலை நோக்கி நகருகின்ற செயற்பாடு என்பது உண்மையில் வளரத் தொடங்கியது.

இன்றைக்கு மலையகத்தில் இரண்டு பெரிய அரசியல் அணிகள் இருக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. ஒன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றது தமிழ் முற்போக்கு கூட்டணி. இரண்டுமே ஓரளவுக்கு பலமாக இருக்கின்றன. ஆனால் மலையக மக்களினுடைய நலன்களை வெற்றி கொள்வதில் போதுமான அளவிற்கு அவர்கள் செயற்பாட்டாளர்கள் என்று கூறிவிட முடியாது. ஆனாலும் மலையக மக்களினது பிரதிநிதித்துவ அரசியலை தக்க வைத்துக் கொள்ள கூடியதான நிலைமை அங்கு இருக்கின்றது.

இந்த பின்னணியில் தான், இந்த 200 ஆவது வருடத்தில் ஒரு தீர்மானத்திற்கு நாங்கள் வர வேண்டும். மலையக மக்களினுடைய நலன்கள் தொடர்பாக எதிர்காலத்தில் என்ன செய்யலாம் என்பது தொடர்பாக நாங்கள் ஒரு வலுவான தீர்மானத்திற்கு வர வேண்டிய நிலைமை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதற்கு முதலில் மலையக மக்கள் சில கோட்பாட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய தேவை இருக்கிறது.

அதில் 4 பிரச்சனைகள் மிக முக்கியமானவை.

1. மலையக மக்களினுடைய அடையாள பிரச்சனை. அவர்கள் இந்திய வம்சாவழியினரா? மலையக தமிழரா?.

2. மலையக மக்கள் ஒரு சிறுபான்மை இனமா, தேசிய இனமா?

3. மலையக மக்களினுடைய பிரச்சனை இறைமை பிரச்சனையா அல்லது அடையாள பிரச்சனையா?

4. மலையக மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வு என்பது நில ரீதியிலான அதிகாரப் பகிர்வா அல்லது சமூக ரீதியிலான அதிகாரப் பகிர்வா?

இந்த 4 கோட்பாட்டு பிரச்சனைகளுக்கும் தீர்வு காணுகின்ற போது தான் உண்மையில் மலையக மக்களின் அரசியல் நிலையில் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுவதற்கான படிகளில் கால் வைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

என்னை பொறுத்தவரையில், நான் மலையக பிரதேசத்தினை சேர்ந்தவன் அல்ல, அதற்கு வெளியில் இருக்கின்ற வடக்கு, கிழக்கு சமூகத்தை சேர்ந்தவன். ஆனால் மலையக மக்களின் நலன்களில் அதிகளவில் அக்கறை உள்ள ஒருவன். அந்த அடிப்படையில் பார்க்கின்ற போது இந்த கோட்பாட்டு பிரச்சனைகள் தொடர்பாக என்னுடைய கருத்தை சொல்வது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

அதில் முதலாவது கோட்பாட்டு பிரச்சனையான இந்திய வம்சாவழியினரா மலையக தமிழரா என்கின்ற பிரச்சனையில் மலையக தமிழர் என்கின்ற அடையாளத்தை பேண வேண்டும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு இலங்கையில் இருக்கின்ற எல்லோருமே இந்தியாவில் இருந்து தான் வந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. முன்பு இந்த இடையில் இருக்கின்ற பாக்குநீரினை கடல் என்பது இருக்கவில்லை. ஆகவே வந்து போவதற்கு இலகுவாக இருந்த காலப்பகுதி. மலையக மக்களை வேண்டுமென்றால் கொஞ்சம் பின்னுக்கு வந்தவர்கள் என்று சொல்லலாம். ஆகவே அவர்களுக்கு மட்டும் இந்திய வம்சாவழியினர் என்று ஒரு அடையாளத்தை போடுவது எவ்வளவு தூரம் சரியானது என்கிற கேள்வி என்னிடம் இருக்கின்றது.

மலையகத்தினை பொறுத்தவரை 8ஆவது தலைமுறையினர் தான் மலையகத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இந்தியாவை பற்றி பெரிதாக தெரியாது. ஆகவே இந்தியாவுடன் ஒரு தொடர்பும் இல்லாத மக்களை ஏன் அந்த பெயருடன் அடையாளப்படுத்த வேண்டும் என்ற ஒரு கேள்வியும் வருகிறது.



மூன்றாவது, மலையகம் என்ற பிரதேசம் வெறும் காடாக இருந்த பிரதேசம். அதனை வளமான பூமியாக மாற்றியவர்கள் மலையக மக்கள். ஆகவே அது அவர்களுக்கு சொந்தமானது. இந்திய வம்சாவழியினர் என்று சொல்லும் போது அந்த மண்ணில் இருந்து அந்நியப்பட வேண்டிய ஒரு சூழல் உருவாகிறது. மனோகணேசன் இது தொடர்பாக அரசாங்க கட்சிகாரரை நேரடியாக கேட்டது: “சுதந்திரத்திற்கு பிறகு இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை தாங்கி பிடித்தவர்கள் மலையக மக்கள். நீங்கள் அனைவரும் வளமாக இருந்தீர்கள் என்றால் அதற்கு மலையக மக்களின் உழைப்பு தான் காரணம். கொழும்பு-கண்டி வீதி போட்டது மலையக மக்கள். துறைமுகங்கள் கட்டியது மலையக மக்கள். நீங்கள் அவர்களுக்கு என்ன நன்றி தெரிவித்தீர்கள்?” என்று அரசாங்க கட்சிகாரரை பார்த்து மனோகணேசன் கேட்டதிலும் கூட பல நியாயங்கள் இருக்கின்றன.

அவர்களை இந்திய வம்சாவழியினர் என்று சொல்கின்ற பொழுது உளவியல் ரீதியாகவே அந்நியப்படுகின்றதாக ஒரு சூழல் உருவாகின்றது. மூன்றாவது இன்றைக்கு மலையகம்

**இலங்கையர் என்ற அடையாளத்தை பேணுவதற்கு அவர்களுக்கு இந்திய வம்சாவழியினர் என்பதனை விட மலையக மக்கள் என்பது தான் கூடுதலான வாய்ப்புகளை தரும்**

என்பது ஓரளவுக்கு சுற்றி வளைக்கப்பட்ட பிரதேசமாக இருக்கிறது. சுற்றிவர சிங்கள மக்கள் வாழுகின்ற பிரதேசமாக இருக்கின்றது. சிங்கள மக்களை பொறுத்தவரையில் இந்தியாவை எதிரியாக பார்க்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஆகவே மலையக மக்களும் இந்திய வம்சாவழியினர் என்ற அடையாளத்தினை பேணுகின்ற போது அவர்கள் மலையக மக்களையும் எதிரியாக பார்க்க வேண்டிய நிலைமை ஒன்று உருவாகும். இது மலையக மக்களின் நலன்களில் நிறைய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சிக்கல் வரும். மற்றது ஒரு இலங்கையர் என்ற அடையாளத்தை பேணுவதற்கு அவர்களுக்கு இந்திய வம்சாவழியினர் என்பதனை விட மலையக மக்கள் என்பது தான் கூடுதலான வாய்ப்புகளை தரும் என்று நான் நினைக்கிறேன்.

மலையக தமிழர்களா இந்திய வம்சாவழியினரா என்கின்ற அடையாளப் பிரச்சனை. கிட்டத்தட்ட சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே விவாதத்திற்கு உள்ளான ஒரு விடயம். குறிப்பாக இந்திய வர்த்தகர்கள் இந்தியாவுடன் நெருக்கமான உறவை கொண்டவர்கள். இந்திய அரசாங்கத்துடனும் நெருக்கமான உறவை கொண்டவர்கள். அவர்கள் இந்திய வம்சாவழியினர் என்ற அடையாளத்தை பேணுவதில் தான் விருப்பமாகவும் குறியாகவும் இருக்கிறார்கள். அதேவேளை மலையகத்தில் புதிதாக எழுச்சி அடைந்து வருகின்ற அந்த மலையகத்தினுடைய நடுத்தர வர்க்கம் மலையக தமிழர் என்ற அடையாளத்தை கூடுதலாக வலியுறுத்துவதில் அக்கறையாக இருக்கிறது. இந்திய அரசாங்கமும் தன்னோடு மலையக மக்களை வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்திய வம்சாவழியினர் என்ற அடையாளத்தை பேணுவதற்கான தூண்டுதலை கொடுத்து கொண்டு இருக்கின்ற நிலைமை ஒன்று காணப்படுகின்றது. ஆனால் மலையக மக்கள் அந்த மண்ணில் சொந்தமாக கால் ஊன்றி நிற்பதற்கு எந்த அடையாளம் உதவக் கூடியதாக இருக்குமோ அந்த அடையாளத்தை நிலை நிறுத்துவது தான் மலையக மக்களினது நலன்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இரண்டாவது, மலையக மக்கள் ஒரு சிறுபான்மை இனமா தேசிய இனமா என்று பார்க்கின்ற போது மலையக மக்கள் தங்களை ஒரு தனியான மக்கள் கூட்டமாக தான் பார்க்கின்றார்கள். ஆகவே அவர்கள் ஒரு சிறுபான்மை இனம் அல்ல தேசிய இனம். மார்க்சிய மூலவர்கள் கூறுகின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் எல்லாம் மலையக மக்களுக்கும் இருக்கிறது. இன்றைக்கு அது இல்லாவிட்டால் கூட ஒரு தேசிய இனமாக கொள்கின்ற நவீன சிந்தனை என்பது வளர்ந்து விட்டது. ஆகவே இந்த அடிப்படையில் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக கொள்ளலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இன்றைக்கு மலையகத்தினுடைய இளைய தலைமுறையினருக்குள் தாம் ஒரு தேசிய இனம் என்கின்ற ஓர் உணர்வு நன்றாகவே வளரத் தொடங்கி இருக்கின்றது.

அடுத்தது, அப்படியென்று சொன்னால் மலையக மக்களின் பிரச்சனை இறைமை பிரச்சனையா அடையாள பிரச்சனையா என்றால் இறைமை பிரச்சனை தான் வரும். ஏனென்றால் தேசிய இனப்பிரச்சனை எல்லாம் இறைமை பிரச்சனை. சிறுபான்மையினரின் பிரச்சனை என்றால் தான் அடையாளப் பிரச்சனை. ஆகவே மலையக மக்களினுடைய பிரச்சனை என்பது இறைமை பிரச்சனையே தவிர அடையாளப் பிரச்சனை அல்ல. அப்படியென்றால், அடுத்த கோட்பாட்டு பிரச்சனை வருகிறது. இதுவும் அதனுடன் தொடர்புடையது. அதாவது, மலையக மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன?

உண்மையில் மலையக மக்கள் மத்திய மலைநாட்டில் செறிந்து வாழ்கின்றார்கள். அதே

வேளையில் ஏனைய இடங்களில் ஐதாக வாழ்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு இரண்டு அம்சங்களை கொண்ட அரசியல் தீர்வு தேவையாக இருக்கிறது. செறிவாக வாழ்கின்ற இடங்களில் அவர்களுக்கு நில ரீதியிலான அதிகாரப் பகிர்வு தேவையாக இருக்கிறது. ஐதாக வாழ்கின்ற இடங்களில் அவர்களுக்கு சமூக ரீதியிலான அதிகாரப் பகிர்வு தேவையாக இருக்கிறது. நில ரீதியிலான அதிகாரப் பகிர்வையும் சமூக ரீதியிலான அதிகாரப் பகிர்வையும் ஒரு அரசியல் தீர்வாக வைப்பது தான் கூடுதலாக பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இன்றைக்கு கூட மலையக மக்களிடம் கிட்டத்தட்ட 8 உள்ளூராட்சி சபைகள் நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு பிறகு அடுத்தபடியாக தமிழ் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற இடம் நுவரெலியா மாவட்டம். இந்த 8 உள்ளூராட்சி அமைப்புகளையும் இணைக்கின்ற போதே அவர்களுக்கு ஒரு நில தொடர்ச்சி வந்துவிடும். ஆகவே உண்மையில் அவர்கள் ஒரு நில ரீதியிலான அதிகாரப் பகிர்வை கட்டாயம் கோர வேண்டிய தேவையில் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இதனை விட மலையகம் வளமான ஒரு பிரதேசம். பெருந்தோட்ட துறை பொருளாதாரம் என்பது அவர்கள் உருவாக்கிய பொருளாதாரம். அதனை விட இரத்தினக்கல் தொழில்துறை, சுற்றுலாத்துறை என்பவை இருக்கின்றன. உப உணவு பயிர்ச்செய்கை இருக்கிறது. ஒரு வளமான பொருளாதாரத்தை கொண்ட மக்கள். அவர்கள் எவரிலும் தங்கி நிற்க தேவையில்லை. தங்களுடைய சொந்த காலில் தங்கி நிற்கலாம். ஆகவே ஒரு அதிகாரப் பகிர்வினை எடுப்பதன் ஊடாக அவர்கள் சொந்த காலில் நிற்க கூடிய நிலைமையை உருவாக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இதுதான் மலையக மக்களுக்கான அரசியல் தீர்வாக இருக்க வேண்டுமென்றால் அதனை அடைவதற்கு மலையக மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று அடுத்த கேள்வி ஒன்று வருகிறது.

இதில் உண்மை நிலை என்னவென்றால் மலையக மக்களினுடைய அரசியல் தீர்விற்கான நியாயப்பாடுகளை நாங்கள் மலையக மட்டத்திலும், இலங்கை மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் குறிப்பாக தமிழக மட்டத்திலும் பேசுபொருளாக்க வேண்டிய தேவை ஒன்று இருக்கிறது. முதல் கட்டமாக முக்கியமாக செய்யப்பட வேண்டிய வேலை இது.

இரண்டாவது, மலையகத்தை பொறுத்தவரையில் மூன்று வகையான தரப்பினர் இருக்கின்றார்கள். ஒன்று அரசியல் கட்சிகள், மற்றது தொழிற்சங்கங்கள், மூன்றாவது பொது அமைப்புகள். இவை மூன்றுக்கும் இடையில் ஒரு ஐக்கியம் தேவை. ஒருங்கிணைந்த அரசியலும் ஒருங்கிணைந்த செயற்பாடும் அவசியமாக இருக்கின்றன. மலையகத்திற்கான ஒரு தேசிய இயக்கத்தை கட்டி எழுப்பலாமா என்று யோசிப்பது கூட கூடுதலாக பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் தேர்தலில் என்னவென்றாலும் செய்யுங்கள், ஆனால் மலையக மக்களின் பொதுவான பிரச்சனை என்று வரும்போது இந்த மூன்று தரப்பும் ஒரு ஒருங்கிணைந்த குடையின் கீழ் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மூன்றாவது மலையக மக்களை பொறுத்தவரையில் மலையகத்தில் வாழ்கின்ற மக்கள் தான் உண்மையில் அடிப்படை சக்திகள். ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற மலையக வம்சாவழியினரையும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் வாழ்கின்ற மலையக வம்சாவழியினரையும் நாங்கள் அடிப்படை சக்திகளாக கொள்ளலாம். வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எல்லாம் மலையக மக்களுக்கு நல்லதொரு வலுவான சேமிப்பு சக்திகளாக இருப்பார்கள். சிங்கள முற்போக்கு சக்திகள் கட்டாயம் தேவை. சிங்கள முற்போக்கு சக்திகள் உட்பட உலகெங்கும் வாழ்கின்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள் நல்ல நட்பு சக்திகளாக இருப்பர். ஆகவே இந்த அடிப்படை சக்திகள், சேமிப்பு சக்திகள், நட்பு சக்திகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைந்த குடையின் கீழ் கொண்டு வர வேண்டிய தேவை மலையக மக்களுக்கு இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன்.

நான்காவது விடயம், இலங்கையை மையமாக வைத்த புவிசார் அரசியலில் மலை

யக மக்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. மலையக மக்களுக்கு பங்கு இருந்தபடியால் தான் நரேந்திரமோடி இங்கு வந்த போது மலையகத்திற்கும் பயணம் செய்தார். ஏனென்றால் வடக்கு கிழக்கு மக்கள் இந்தியாவுடன் நிற்கிறது குறைவு, ஆகவே அவர்களுக்கு இலங்கையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இன்னொரு பலம் ஒன்று தேவையாக இருக்கிறது. ஆகவே மலையக மக்களை அவர்கள் தங்களின் பக்கம் வைத்திருக்க கூடியதான ஒரு சூழலை நோக்கி நகர்த்துகின்ற ஒரு நிலைமையும் கூட காணப்படுகின்றது. மலையகத்தில் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்புகள் நடக்கின்ற நிலைமை இருக்கிறது. அவை எல்லாவற்றையும் தடுப்பதற்கான ஒரு பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

இதைவிட மலையகத்தை எப்படி உலகத்திற்கு கொண்டு செல்வது உலகத்தை எப்படி மலையகத்திற்கு கொண்டு செல்வது என்பதிலும் நாங்கள் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். இவற்றை அடிப்படையாக வைத்து ஒரு வலுவான வழி வரைபடத்தினை உருவாக்கி நாங்கள் செயற்படுவோமாக இருந்தால் மலையக மக்களின் வளர்ச்சியில் ஒரு பாரிய பாய்ச்சலை காணக் கூடியதான சூழல் உருவாகும் என்று நான் நினைக்கிறேன்.

வடக்கு கிழக்கு மக்களை பொறுத்த வரையில் மலையக மக்கள் தொடர்பாக அவர்களுக்கு பொறுப்புணர்வு இருக்கிறது. ஒரு சக தேசிய இனம் என்பதற்கு அப்பால் இந்த இலங்கை தீவில் மிகவும் மோசமாக ஒடுக்கப்படுகின்ற மக்கள் என்ற வகையில் அவர்களோடு கை கோர்க்க வேண்டிய தேவை இருக்கிறது. சுதந்திரத்திற்கு பிறகு தமிழ் அரசியலினுடைய ஆரம்ப காலத்தில் இருந்தே அது தொடர்பான அக்கறை என்பது காட்டப்பட்டது. தமிழரசு கட்சி 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போது தந்தை செல்வா தலைமையுரை ஆற்றுகின்ற போது பிரதானமாக, "மலையக மக்கள் தொடர்பாக நாங்கள் வலு அக்கறையாக இருக்க வேண்டும் அவர்களுக்கு தேவையான உதவிகளை எல்லாம் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும்" என்று சொன்னார்.

இதற்கு பிறகு தமிழரசு கட்சியின் ஒவ்வொரு மாநாட்டிலும் மலையக மக்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு தீர்மானம் நிறைவேற்றப்படும். ஆகவே 1985 ஆம் ஆண்டு திம்பு மாநாட்டில் நான்காவது கோரிக்கையாகவும் மலையக மக்களின் கோரிக்கை தான் வைக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பிரச்சனை வந்த போது நான்கு அம்ச கோரிக்கையை தமிழரசு கட்சி வைத்தது. அதில் மூன்றாவதும் நான்காவதும் கோரிக்கை மலையக மக்கள் பற்றிய கோரிக்கைகள். ஆகவே தொடர்ச்சியாக அக்கறை காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அது போதுமானது என்று சொல்ல வரவில்லை அந்த அக்கறையை இன்னும் எப்படி வலுவாக்குவது என்பது பற்றி வடக்கு கிழக்கு சக்திகளும் கூடுதலாக கவனம் செலுத்துவது நல்லது என்றே நான் நினைக்கிறேன்.

இதனை விட, வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மலையக மக்களை இங்குள்ள மக்கள் போதியளவு கவனம் செலுத்தி அவர்களை இணைத்து வாழவில்லை என்ற அதிருப்தி ஒன்று மலையக படித்த மத்தியதர வர்க்கம் மத்தியில் இருக்கின்றது. அதில் பல உண்மைகளும் இருக்கின்றன. ஆகவே அந்த உண்மைகளையும் கவனத்திலே எடுத்து இங்கே வாழ்கின்ற மலையக மக்கள் தொடர்பாக வலுவான கவனத்தினை செலுத்தி அவர்களுடைய வளர்ச்சியில் பங்களிப்பு செய்வதற்கு வடக்கு கிழக்கில் வாழ்கின்ற ஏனைய மக்களும் தயாராக இருக்க வேண்டும் என்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

தமிழ் மக்கள் நடத்திய இந்த தேசிய போராட்டத்தில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மலையக மக்கள் நிறைய பங்களிப்புகளை செய்திருக்கின்றார்கள். நிறைய பேர் மரணம் அடைந்து இருக்கிறார்கள். ஆகவே அந்த தியாகங்களுக்கு எல்லாம் மதிப்பு கொடுக்க வேண்டிய தேவை ஒன்று இருக்கிறது. உண்மை என்னவென்று சொன்னால் மலையகத்திற்கு வடக்கு கிழக்கு மக்கள் வலதுகரமான ஒரு வலுவான கரமாக இருக்க வேண்டும், அதே போல வடக்கு கிழக்கிற்கு மலையக மக்கள் வலுவான கரமாக இருக்க வேண்டும். ஆகவே இதனை நாங்கள் எப்படி கட்டி எழுப்புவது என்பது பற்றி கூடுதலாக யோசிப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

# மூதாளர் அரங்கு ஏன் முக்கியமானது?



துருவன்

போருக்கு பின்னரான தமிழ் சமூகத்தில் முதியவர்களின் இன்றைய நிலை, முக்கியமாக அவர்களின் உடல், உள நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பது குறித்து சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது.

இலங்கையில் 2010 ஆம் ஆண்டில் பத்தில் ஒன்றாக இருந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை 2050 ஆம் ஆண்டளவில் மூன்றில் ஒன்றாக அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. தென்னாசியாவிலேயே மிக விரைவில் மிகக்கூடிய வயதானவர்களின் வீதத்தை கொண்ட நாடாக இலங்கை மாறி வருகிறது. முதியோர்கள் தொகை அதிகரிப்பு இலங்கையின் பொருளாதார விடயங்களிலும் நிச்சயமாக கூடுதலான தாக்கத்தை செலுத்தும். முன்னேறிய நாடுகள் போன்று முதியோர்களுக்கான சரியான உடல், உள, சமூக பாதுகாப்பு செயல்திட்டங்கள் இங்கே இல்லையென்றே கூறலாம்.

ஆரம்ப காலங்களில் கூட்டுக் குடும்பங்களாக இருந்த போது முதியோரின் நிலை ஒப்பீட்டளவில் நன்றாக இருந்தது. இப்போதைய காலங்களில் கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து தனிக்குடும்பங்கள் அதிகமாகி கொண்டு வரும் நிலையில் முதியோர்கள் தனிமைப்படுத்தப்படும் நிலை உள்ளது. இதனால் அவர்கள் உள ரீதியாக பாதிக்கப்படும் நிலையும், குடும்ப கட்டமைப்பில் இருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலையும் உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு தான், முதியோர்களை ஆற்றுப்படுத்தும் மூதாளர்கள் அரங்கு எனும் செயல்திட்டமொன்றை பண்பாட்டு மலர்ச்சிக் கூடம் முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பில் பல்வேறு கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார் அரங்க செயல்பாட்டாளர் சிதம்பரநாதன்.

மனிதர்கள் தனித்து தனித்து இருக்கின்ற வாழ்க்கை முறையின் காரணமாக உடல் அசைவில்லாமல் இருத்தல், மன அமைதியின்மை போன்றன அதிகம் ஏற்படுகின்றன. இன்று சமூகத்தில் தொற்றா நோய்கள் அதிகரித்து வருகின்றன. மனிதர்கள் தங்கள் உடலையும் மனதையும் செயல்முனைப்பானவர்களாக மாற்ற வேண்டும். ஆகவே, இந்தக் களத்தில் மூதாளர்

கள் ஒன்று கூடி தங்கள் உடலையும் மனதையும் செயல்முனைப்பானவர்களாக மாற்றி செயல்திறன் உள்ளவர்களாக தங்களை மேம்படுத்திக் கொள்ள இந்த அரங்கு உதவி புரிகிறது.

மூதாளர்கள் இந்த இடத்தில் ஒருவரையொருவர் சந்திப்பதன் மூலம் அவர்களுக்கு இடையில் பரஸ்பரம் உறவு ஏற்படுவதன் மூலம் தைரியமாக தங்கள் பட்டறிவை, அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். அப்படியான உரையாடல்கள் மூலம் இன்று நாங்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எவ்வாறு கூட்டாக எதிர்கொள்ளலாம் என்கிற எண்ணங்கள் இங்கே மேற்கிளம்புவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த பட்டறிவை பகிர்வதன் மூலம் வெளிவரும் விடயங்கள் எம் இளைய தலைமுறையையும் வருங்கால சந்ததியையும் ஆரோக்கியமான திசையில் நகர்த்த உதவியாக அமையும். நாங்கள் எல்லோரும் நெருங்கி வந்த போது தனக்கு இனம்புரியாத பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டதாக இன்று நடந்த அரங்கின் பின் முதியவர் ஒருவர் கூறினார். இன்னொருவர் தன்னை புதுப்பித்துக் கொண்டதை போல புத்துணர்வாக இருந்ததாக, வயதை மீறிய உற்சாகம் வருவதாக கூறினார்.

அரங்கின் ஊடாக செயல்முனைப்பானவர்களாக மாறும் போது தாங்கள் இந்த சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற எண்ணங்களும் ஏற்படும். வீடுகளில் முடங்கி இருக்காமல் சமூகத்தில் செயல்பாட்டாளர்களாக மாறும் நிலையும் உள்ளது. ஐம்பது வயதுகளில் உள்ள பலரும் குடும்ப பொருளாதார சிக்கலுக்குள் மாட்டுப்பட்டு உள்ளனர். இன்று வயது அதிகமானவர்கள் என்றால் இவர்களால் பிரயோசனமில்லை என்று குடும்பமும், சமூகமும் ஒதுக்கி வைக்கும் நிலை தான் உள்ளது. தினமும் குறிப்பிட்ட சில செயல்பாடுகளுடன் வீட்டில் செயலற்றவர்களாக முடங்கும் நிலை தான் உள்ளது.

இன்று இருக்கின்ற வயதானவர்கள் அனைவருமே போராட்ட காலங்கள் அது சார்ந்த பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும் வாழ்ந்து தங்கள் குடும்பங்களையும் வாழ வைத்தவர்கள். நீண்ட நெடிய அனுபவம் உள்ளவர்களாக உள்ளனர். பழைய ஞாபகங்களை பகிருகின்ற போது புதிய எண்ணங்கள் மேற்கிளம்புகின்றமை தான் முக்கியமான விடயம்.

2009க்குப் பிறகு இந்த சமூகம் சீரழிந்ததை தவிர எதுவுமே நடக்கவில்லை. ஒரு பிரச்சினைக்கும் எங்களால் தீர்வு காண முடியாமல் உள்ளது. இந்தப் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் புதிய கற்பனைகள் எங்களுக்கு தேவையாக உள்ளது. இப்படியான அரங்குகள் இவ்வாறான பிரச்சினைகளை எப்படி தீர்ப்பது என்பதனை அனுபவக் கிடங்கினுள் ஆழப் புதைந்து புதிய கற்பனைகளோடு மேலுழும்புகின்ற ஒரு வழிமுறை தான் இது.

மூதாளர் அரங்கில் பங்கேற்ற மருத்துவர் சிறிதரன் கருத்து தெரிவிக்கையில், உடல் அசைவு குறைந்த வாழ்க்கை முறையை நாங்கள் வாழ்வதால் புதிதாக எதையுமே சிந்திக்க முடிவதில்லை. எந்த விடயத்தையும் நாங்கள் புதிதாக செய்ய யோசித்தாலும் எங்களுக்கு வரக் கூடிய பதில்கள் "அதை இப்ப செய்யேலாது, நீங்கள் நினைக்கிறமாதிரி நிலைமைகள் இங்கே இல்லை." இப்படி எங்கள் மனமும் உடலும் இறுகி இருக்கிறதால் நாங்கள் இணைந்து வேலை செய்யக்கூடிய வெற்றிடங்கள் தென்படுவதில்லை. இதனால் எங்கள் சமூகத்திலிருந்து புதிய முயற்சிகள், கண்டுபிடிப்புகள் வருவது மிகக் குறைவாகும். சாதாரண முயற்சிகள் கூட வினைத்திறன் குறைந்த வேலைகளாக தான் இருக்கும்.

அடுத்து ஒரு இயந்திரமயமான ஒரே முறையான வாழ்க்கை. இது காலப்போக்கில் சோம்பலாக்கும். பல்வேறு உடல் உள உபாதைகளை தரும். முக்கியமாக 60 வயதுக்கு பிறகு இப்படியான ஒன்றுகூடல்கள் நடந்து பாடல், ஆடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு தங்களது மனங்களையும் உடல்களையும் இலகுவாக்கி எங்கள் சமுதாயத்தை நல்ல ஒரு வழிக்கு திருப்புகின்ற முயற்சியாக தான் நான் இதனைப் பார்க்கிறேன்.

அரங்கினூடாக மூதாளர்களை செயல் முனைப்பானவர்களாக ஆக்கி இந்த சமூகத்துக்கு அவர்களின் சிந்தனைகள் பயன்பட வேண்டும்.

(3ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த முயற்சிக்கு சமமாக இளைய நீர்வள ஆர்வலர்கள் (young water professionals) என்ற பெயரில் வடக்குக்கான பல்வேறுப்பட்ட துறைகளை சார்ந்த இளம் துறையாளர்களைக் கொண்ட வட்டம் ஒன்று இயங்கிக் கொண்டு வருகின்றது. அவர்களுடைய முன்மொழிவுடன் அவர்களுடைய ஆதரவுடன் நல்லூர் பிரதேச சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்களும் பிரதேச சபை தேர்தலில் போட்டியிடப் போகின்ற அங்கத்தவர்களையும் அழைத்து உள்ளூராட்சி சபையின் வகிபாகம், அவர்கள் கையில் இருக்கின்ற அதிகாரங்கள், அவர்களை கட்டுப்படுத்தும் விதிமுறைகள், அவர்கள் பணிகளை இன்னும் நேர்த்தியாக செய்வதற்கான வழிமுறைகள் பற்றி பேசுவதற்கு அழைத்திருந்தோம்.

இதுவரை மாகாண அலகுகளை உள்ளடக்கிய உரையாடல் இன்று ஒரு படி கீழே வந்து, கிராம நிர்வாகத்துக்கு மேலே இருக்கின்ற பிரதேச சபை என்று சொல்லப்படுகின்ற அதிகார அலகுகளில் ஒன்றாகிய நல்லூரில் நிறைவேறி இருக்கின்றது. முதல் முயற்சி ஒரு வகையான பதற்றத்துடன் ஆரம்பமானது. ஆனால், எந்த ஒரு விடயத்தையும் சரியான அணுகுமுறையுடன் திறந்த மனதோடு நல்ல வழிமுறைகளைப் பின்பற்றினால் நல்ல உரையாடல்கள் நிகழும், நிகழ்த்த முடியும் என்ற உற்சாகத்தை இது கொடுத்துள்ளது.

எமது மொழியில் பணிவும் உணர்வும் அன்பும் கலந்த வகையில் உள்ள விடயங்களை உள்ள வகையில் உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பொழுது அவர்கள் அவதானிக்கின்றார்கள். சரியான முறையில் கருத்துகளை முன்வைக்கின்ற போது அவர்கள் அதற்கான பதில்களை சொல்ல முன்வருகின்றார்கள். இது எல்லோருக்கும் முடியும். வந்த 11 பேரை நீங்கள் எந்த கட்சியில் உள்ளீர்கள் என்று எங்களுக்கு தெரிய தேவையில்லை, நீங்கள் சொல்லவும் தேவையில்லை என்று விதிமுறைகளில் ஒன்றாக அச்சிட்டு ஒட்டியதன் அடிப்படையில் அவர்கள் ஒரு புன்முறுவலுடன் எழும்பி தாராளமாக பேசினார்கள். இங்கே நடப்பது பற்றி கேள்விப்பட்டு தாங்களும் ஏதும் கற்றுக் கொள்ளலாம் என்று சொல்லித்தான் வந்தார்கள். அவர்கள் கற்பதற்கான முதல் படியை எடுப்பதற்கான வாய்ப்பை நாங்கள் தந்திருக்கிறோம்.

'இது ஒரு வட்டம், இது ஒரு வழி, இது ஒரு பாதுகாக்கப்பட்ட வெளி. இந்த வெளியில் பேசப்படும் விடயங்கள் உங்கள் பெயரில் வெளியே போகாது. ஆனால் இங்கே பேசப்படுகின்ற கருத்துகள் தாராளமாக உலகத்திற்கு எடுத்துச் சொல்லப்படும்.

> **இந்த வெளியில் பேசப்படும் விடயங்கள் உங்கள் பெயரில் வெளியே போகாது. ஆனால் இங்கே பேசப்படுகின்ற கருத்துகள் தாராளமாக உலகத்திற்கு எடுத்துச் சொல்லப்படும்**

நீங்கள் பிரதிநிதிகளாக தேர்தலில் வெற்றி பெற்று நல்லூர் பிரதேச சபையில் வேலைகளை தொடங்கும் பொழுது இந்த இளம் பொறியியலாளர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். அவர்கள் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய அறிஞர்களும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களும் அனைத்திலும் பங்கு ஏற்கக் கூடிய நிலையில் ஆயத்தமாக இருப்பார்கள். உங்களுக்கு கை கொடுப்பார்கள். நீங்கள் நல்ல முடிவுகளை எடுங்கள். விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். பின்பற்றாதவர்களை கண்டியுங்கள். குழாய்கிணறுகள் தேவைப் படுகின்ற இடத்தில் தேவைப்படுகின்ற நேரத்தில் அங்கீகாரங்களை வழங்குங்கள். வீடு கட்டும் போது வீடுகளைச் சுற்றி நிலத்துக்குள் நீர் போகாமல் தடுப்பு செய்யும் கற்களை பதிப்பதை கேள்விக் குள்ளாக்குங்கள்.' இவ்வாறான பல விடயங்களை பேசியதின் அடிப்படையில் அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அவசியமாகப்பட்ட விடயங்களை எடுத்துப் பேசத்தான் போகின்றோம் என்று உறுதி பூண்டார்கள்.

நீர் மாசடைதல், நீரில் கழிவுகள் சேர்த்தல் போன்றவை தமது இதயத்தோடு தொடர்பாக உள்ள தலைப்புகள் என்று சொல்லி அவை தொடர்பான நடவடிக்கைகளை செய்வதாக சொல்லி இருக்கிறார்கள். எதையும் நாங்கள் உறுதியாக அங்கீகாரமாக அல்லது கட்டாயமாக நிறைவேறும் என்ற எண்ணத்துடன் போக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நல்ல மனமும், நல்ல மன உறுதியும் நல்ல பாதையும் இருந்தால் நல்ல முடிவுகள் வரும். எல்லாமே கற்றல் தான். எல்லா பெரிய யாத்திரைகளும் எடுக்கப்படுகின்ற முதல் படியில் தான் ஆரம்பிக்கப்படுகிறது. அவ்வாறான ஒரு முதல் படி நல்லூர் பிரதேச சபையில் எடுக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் வழி நடத்துவதற்கு பல்கலைக்கழகம் தந்த வாய்ப்புக்கு நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். இதனை மற்

றைய பிரதேசங்களிலும் பரீட்சார்த்தமாக ஆக்க விரும்புகிறேன். எல்லா பிரதேச சபைகளிலும் நீர்வளம் அச்சுறுத்தலாக இருக்கின்றதால் இது எல்லா பிரதேச சபைக்கும் பொருந்தும். ஊர்காவற்றுறைக்கும் பொருந்தும், கரவெட்டிக்கும் பொருந்தும், காரைநகருக்கும் பொருந்தும். காணாமல் போன குளங்களை மீட்டெடுப்பது உட்பட நல்ல ஒரு பாதைக்கு நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறோம்.

பேராசிரியர் சிறீஸ்கந்தராஜாவின் இந்தக் கருத்துகளை தொடர்ந்து கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் பலர் தமது கருத்துகளை தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த கருத்துகளில் சில வற்றை கீழே தொகுத்து இருக்கிறோம்.

நீர் என்ற பரப்புக்குள் மட்டுமல்லாமல் சமூகத்தின் ஏனைய வளங்கள் சம்பந்தமாகவும் பொது மக்களுக்கு விழிப்பூட்டல் என்பதையும் தாண்டிய அறிவூட்டலுடன் சரியான வழிகாட்டலையும் வழங்க வேண்டும். அவற்றின் உரித்தாண்மையை அவர்களிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் தான் தலைமுறை தலைமுறையாக கடத்திக் கொண்டு போக கூடியவர்கள்.

அரசாங்க நிறுவனங்களும் சந்தை நிறுவனங்களும் இந்த மக்களுடன் இணைந்து பயணிக்கக் கூடிய வகையில் தங்களுடைய திட்டங்களை கொள்கைகளை நெகிழ்வுத் தன்மை கொண்டவையாகவும் இலகுவாக அணுகக் கூடியவையாகவும் மாற்றிக் கொள்ள வேண்டும். சுன்னாகம் குடிநீர் விடயத்தில் சமூகத்திடம் பிரச்சினையை கையளிக்காமல் போனபடியால் தான் பின்னூட்டம் இல்லாமல் போனது.

எங்கெல்லாம் குளங்கள் உள்ளன என அடையாளம் காண வேண்டும். அவற்றின் எல்லைகளை தெளிவாக்க வேண்டும். அந்த விபரங்கள் பொருத்தமான முறையில் கணனிமயப்படுத்த வேண்டும். குளங்கள் தொடர்பில் இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகள், ஆய்வுகள், செய்திகளை தொகுத்து ஆவணப்படுத்த வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு நான்காம் ஆண்டிலிருந்து நீர் தொடர்பிலான பாடம் இருக்கின்றது. மாணவர்களை அருகிலுள்ள குளங்களுக்கு அழைத்து சென்று அங்கே என்னென்ன பறவைகள் வருகின்றன, என்னென்ன பூச்சியினங்கள் உள்ளன, எவ்வகையான தாவரங்கள் சுற்றி உள்ளன போன்ற அடிப்படை அறிவியல் ரீதியான விடயங்களை நடைமுறை ரீதியாக காட்ட வேண்டும்.

சிறிய வெற்றிகளை முதலில் அடைந்து கொண்டு செல்வது தான் நல்லது. இன்றைய நாட்டு சூழலில் அரசாங்கம் நிதியை தந்து அதனை கிராமங்கள் செலவழிக்கும் நிலை இல்லாமல் போய் விட்டது. இப்படியான உரையாடல்கள் கிராமங்கள் ரீதியில் பரவலாக்கப்பட வேண்டும்.

குளம் என்பது வயலுக்கு மட்டும் தண்ணீர் கொடுப்பதாக தான் முதலில் இருந்தது. இனி குடி தண்ணீரில் இருந்து பல தேவைகளுக்கும் குளங்களின் தண்ணீர் தேவையாக உள்ளது. பல்வேறு இடங்களிலும் நீர் தொடர்பில் சிந்திக்கும், உரையாடும் குழுக்களை செயற்படுத்துவது அவசியமானது. நீர் பிரச்சினைகளுக்கு உள்ளூர் மட்ட தீர்வுகளை முதன்மைப்படுத்த வேண்டும். உலக நாடுகளிலும் நீர் பிரச்சினைகளை தீர்க்க எவ்வாறான முன்னெடுப்புகளை செய்தனர், அதில் எமது தேசத்துக்கு எவ்வாறான விடயங்கள் பொருத்தமாக இருக்கும் என ஆராய வேண்டும். அதிலிருந்து நாம் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்ள முடியும்.

இங்கே கதைக்கின்ற விடயங்களை சிறிய ளவில் நடைமுறைப்படுத்தி சமூகங்களில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் இந்தக் கட்டமைப்பு பலம் பெறும். அதன் மூலம் எமது சமூகமும் பலமிக்கதாக மாறும். குளங்களின் பராமரிப்பு அப்பகுதி மக்களின் பங்குபற்றல் பொறிமுறையூடாக செயற்படுத்தப்பட வேண்டும். இருக்கின்ற வளங்களை பாதுகாத்துக் கொண்டு தான் நாங்கள் புதிய செயற்திட்டங்களை நோக்கி நகர வேண்டும்.

சமூகங்களின் பங்குபற்றல் அதிகரிக்கக் கூடிய வகையில் செயல் ரீதியான திட்டங்களை வகுக்க வேண்டும். வளங்களை சரியான இடத்துக்கு நகர்த்த வேண்டிய தேவை உள்ளது. ஒரு திட்டத்தை சரியாக செயற்படுத்துதல் மட்டுமல்ல, அதனை தொடர்ந்து பராமரிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலும் மிகவும் முக்கியமானது.

இரண்டு வருடங்களாக நீர் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உரையாடல் மன்றங்களை நடாத்தி வருகிறோம். நீர் தொடர்பான தொழிநுட்ப விடயங்களை தெரிந்தவர்களும் அறிவு, ஆய்வு தளத்தில் இயங்கும் பல்கலைக்கழகத்தையும் ஒரே தளத்தில் வைத்து உரையாடல் செய்வது முக்கியமானது. அடுத்த உரையாடல் செயற்பாட்டுக்கான உரையாடலாக அமைய வேண்டும்.

# தையிட்டியிலும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலம்



> அன்றைய தவிசாளர் சுகிர்தன் விகாரை கட்டுவதை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாக காட்டும் ஆவணம் எதுவும் இல்லை

ஈழவன்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குள் அமைந்துள்ள தனித்தமிழ் கிராமமான தையிட்டியும் பௌத்த சிங்கள மயமாக்கப்பட்டு வருகிறது. தையிட்டி தெற்கு (J 250) கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்தே சிறீ லங்கா அரசினால் விகாரை, தூபி என்பன கட்டப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த தையிட்டியில் 2019 இல் விகாரை அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்ற போது அப்போதைய வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளராக இருந்த சுகிர்தன் அவர்களுக்கு பல தடவைகள் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் குறித்த முயற்சிகளை தடுத்து நிறுத்தும் வகையில் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதனைத் தொடர்ந்து இலங்கையின் இனவழிப்பு இராணுவம் தையிட்டியில் ஆக்கிரமிப்பு விகாரை ஒன்றை விரைவாக கட்டி முடித்துள்ளது.

இன்று விகாரை அமைத்தல் தொடர்பில் மக்களுக்குள்ள கோபம் யாதெனில், விகாரை கட்டி முடியுமட்டும் இந்த அரசியல்வாதிகள் என்ன செய்தார்கள் என்பதே மக்கள் எழுப்பும் கேள்வி? உண்மையில் இந்த விடயத்தில் ஒருவரையொருவர் கைகாட்டுவதில் நியாயம் இல்லை.

ஆனாலும், அடிப்படையில் பிரதேச சபைக்கு இப்படியான கட்டுமானங்களை நிறுத்தும் அதிகாரம் உள்ளது. ஆனால் அன்றைய தவிசாளர் இப்படி விகாரை கட்டுவதை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாக காட்டும் ஆவணம் எதுவும் இல்லை. இதன்மூலம் சுகிர்தன் அவர்கள் இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்ற வகையிலேயே நடந்து கொண்டுள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது.

1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களவர் ஒருவர் வெளிப்படுத்தல் உறுதி மூலம் 17 பரப்பு காணியை பெற்றுக் கொண்டதாகவும் பின் அதனை இரு பிக்குகளுக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது. பின் அவர்கள் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள குறித்த காணியை சூழ இருந்த பத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் நூறுக்கும் அதிகமான பரப்புகள் கொண்ட காணிகளை அபகரித்துள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருக்கும் தையிட்டியில் தற்போது கட்டப்பட்டு இருக்கும் 100 அடி உயரமான தூபி (Stupa) கோட்டாபய ராஜபக்சே அதிகாரத்திலுருந்த போது ஜெனரல் சவீந்திர சில்வா தலைமையில் கட்டப்பட்டது. அதே சமயம் தையிட்டி திஸ்ஸ ராஜ விகாரை (Vihara) நல்லாட்சி காலத்தில் 2018 ஆம் ஆண்டு ஆளுநராகவிருந்த ரெஜினோல்ட் குரே தலைமையில் கட்டப்பட்டது.

இது தொடர்பில் ஏற்கனவே வலி தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்திலும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், நிரந்தரக் கட்டடம் அமைக்க இடைக்காலத் தடை விதித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. எனி னும் தற்போது விகாரை கட்டி முடிக்கப்பட்டு முழுமை பெற்றுள்ளது. தமிழ் மக்களின் பாரம் பரிய நிலமாக உளுத்தங்கலட்டி என பெயர் பெற்றிருந்த குறித்த இடம் பின் சிங்கள மய மாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் காண்டீபன் தெரிவித்த விடய ங்கள் வருமாறு, சிறீலங்கா அரசின் ஒற்றையா ட்சி யாப்பின் ஒன்பதாவது உறுப்புரை சொல்கி றது பௌத்த மதம் அரச மதம், அதனைப் பாது காக்கின்ற பொறுப்பு அரசிடம் கையளிக்கப்பட்டி ருக்கிறது. காணி அதிகாரங்கள் அனைத்துமே மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசிடம் காணி அதிகாரம் இருந்த காரணத்தால் தான் 2018 இல் ஆளுநராக இருந்த ரெஜினோல்ட் குரே அடிக்கல்லை நாட்டியிருக்கிறார். அப்போது வடமாகாண சபையும் இருந்தது என்கிற துன்பகர மான செய்தியையும் நாம் வெளிப்படுத்த வேண் டும். வலிவடக்கு பிரதேச சபை, மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார் கள் என்பதற்கு அப்பாலே இன்று கட்டப்பட்டுள்ள சட்ட விரோதமான கட்டடம் அகற்றப்பட வேண் டும். உறுதி மாற்றம் செய்யப்படாத ஒரு தனி யார் காணியிலேயே மேற்படி தூபி அமைக்கப் பட்டுள்ளது. சிறீலங்கா இராணுவத்தின் ஒத்து ழைப்புடன் அவர்களாலேயே கொண்டு நடத்தப் படுகின்ற திஸ்ஸ மகா விகாரை என்றே வாச லில் உள்ள கல்வெட்டில் பெயர் பொறித்துள் ளார்கள். அது கிறிஸ்துவுக்கு முன் 236 ஆண்டு கள் அதாவது விஜயனின் வருகையோடு சம்பந் தப்படுத்தப்பட்டதாக புனையப்பட்டுள்ளது.



மூன்று நாட்களாக நடந்த போராட்டம் தொடர்பில் கிராமவாசியான ஐயாத்துரை யோக ராஜா என்பவர் கருத்து தெரிவிக்கையில், இது தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாய பூமி. இங்குள்ள மக்களில் கிட்டத்தட்ட 80 வீதமா னோர் விவசாயிகள், 20 வீதமானோர் மீனவர் கள். இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிக்குள் பெரிய நன்னீர் கிணறு ஒன்று உள் ளது. அதிலிருந்து தான் எம் மக்கள் அன்று விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது அந்த தண்ணீரை பொலிஸ், இராணுவம் கொள்தாங் கிகள் கணக்கில் எடுத்து தமது தேவைகளுக்காக பயன்படுத்துகிறார்கள். இப்போது அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள விகாரையின் எல்லையில் எங்களின் நாதவளை வைரவர் கோயில் காணி இருக்கிறது. அந்தக் கோயிலின் அரைவாசி இடத்தையும் விகாரைக்காக பிடித்திருக்கிறார் கள். கடந்த வருடங்களில் வெசாக் தினத்தில் பாரிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்து வது வழமை. ஆனால் இம்முறை போராட்டம் நடந்ததால் வீதிகளில் பாரிய வெசாக் பேரணி களை காணவில்லை என்றார். அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் வரை தையிட்டி வாழ் உறவுகள் ஏதாவதொரு வழியில் போராடுவார் கள் என தெரிவித்தார்.

# தேசிய இனப்பிரச்சனையும் சாதியமும்




சிவா

ஒரு சமூகத்திற்கு பல புறவயமான பிரச்சனைகள் இருக்கும், பல அகவயமான பிரச்சனைகள் இருக்கும். அச்சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் இந்தப் பிரச்சனைகளில் சில கூர்மையடைந்து அச் சமூகத்தின் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படைப் பிரச்சனைகளாக மாறும். அப்பொழுது, தமது அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வு வேண்டும் என்று அச்சமூகம் போராட முற்படும். ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்று அடிப்படைப் பிரச்சனையாக இருப்பது புறவயமான தேசிய இன ஒடுக்குமுறை என்பதே. அந்த அடக்குமுறைக்கு எதிராக அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் பொழுது ஆளும் தரப்பு அகவயமான பிரச்சனைகளை முன்னுக்குத் தள்ளி அடிப்படைப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடக்கும் போராட்டத்தை உடைக்கப் பார்க்கும். ஈழத்தமிழ் மக்களுக்கிடையே பிளவுகளை உண்டாக்க அடக்குமுறையாளர் கையில் எடுத்திருக்கும் ஆயுதங்களில் ஒன்றாக அண்மைக்காலங்களில் முன்தள்ளப்படும் சாதியவாதம் இருக்கின்றது.

அதேவேளை, அக ஒடுக்குமுறைகளில் எமது சமூகம் கவனம் செலுத்த வேண்டும். எந்தவொரு சமூகத்துக்கும் அகவயமான பிரச்சனைகள் இருக்கும். அவற்றை இல்லை என்று மறுப்பது அந்த சமூகத்தை முன்னோக்கி நகர்த்தாது. இன்னும் பார்க்கப்போனால், அப்படி மறுப்பது அடிப்படைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான போராட்டத்தை பலவீனப்படுத்தும். அவை இருக்கின்றன என்று ஒத்துக் கொள்வதும் அவற்றையும் தீர்ப்பதற்கான கொள்கைகளை வகுப்பதும் வேலைத்திட்டங்களை முன்வைப்பதும் மிகமிக அவசியமானவை.

ஒரு சமூகம் தனது எல்லாப் பிரச்சனைகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவற்றைத் தீர்ப்பதற்கான தனது சக்தியை பகிர்ந்து கொள்ளும். இது சாதாரணமாக எல்லா இடங்களிலும் நடப்பதுதான். ஒரு சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத்தை நிர்வகிப்பதில் கூட அக் குடும்பத்துக்கு தேவையானவற்றை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கொண்டுதான் அது அவற்றை தீர்க்க முற்படும். அந்தவகையில் இன்று ஈழத்தமிழ் சமூகமும் தன்னுடைய பிரச்சனைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்து அவற்றின் தீர்வை ஒழுங்குபடுத்த முனைய வேண்டும். அந்த ஒழுங்குபடுத்தல் அவர்களுக்குள் இருந்து தன்னிச்சையாக தானாக எழ வேண்டும். வெளியில் இருப்பவர்கள் சொல்லி அல்ல.

ஈழத்தமிழ் சமூகத்தில் சாதியம், பெண்களுக்கான சமவுரிமை மறுப்பு, ஏழைகளின் உழைப்புச் சுரண்டல், பிரதேசவாதம் என்பன முக்கியமான அகவயமான பிரச்சனைகளாக இருக்கின்றன. மேலும், கல்வியில் பின்னடைவு, கலாச்சார சீரழிவு, போதைப்பொருள் பாவனை, என்று பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். அடிப்படைப் பிரச்சனையை தீர்க்கும் போராட்டத்தில் இந்தப் பிரச்சனைகளை பற்றி கவனிக்க வேண்டியதில்லை என்பதை ஒரு பொழுதும் ஒத்துக் கொள்ள முடியாது.

போராடும் மக்கள் தமது அடிப்படை பிரச்சனைக்கான தீர்வுக்கு மீண்டும் மீண்டும் அறைகூவல் விடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதேவேளை அகவயமான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முன்னெடுப்புகளும் அந்த மக்கள் கூட்டத்தினுள் இருந்து தானாக உள்ளெழுந்து வர வேண்டும். அதாவது, எவ்வாறு ஒரு மக்கள் கூட்டம் தனது அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் போராட்டத்தை தானாகவே தன்னியல்பாக முன்னெடுக்க முற்படுகிறதோ அதேமாதிரி தனது அகவயமான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முன்னெடுப்புகள் அதற்குள்ளிருந்தே

தன்னியல்பாக வர வேண்டும்.

அந்த அகவயமான பிரச்சனைகளை முன்னுக்குத் தள்ளி அடிப்படைப் பிரச்சனையிலிருந்து போராடும் மக்களின் கவனத்தை வேறு திசைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகள் தொடர்பாக போராடும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். முக்கியமாக வெளியிலிருந்து வந்து 'அடிப்படைப் பிரச்சனை அல்ல உனது பிரச்சனை, இங்கே பார் இந்த மற்றைய பிரச்சனை தான் இப்போது தீர்க்கப்பட வேண்டியது.' என்று சொல்லும் நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் ஒரு படி மேலே சென்று 'இந்த மற்றைய பிரச்சனையை தீர், உனது அடிப்படைப் பிரச்சனையே தீர்ந்து போகும்.' என்றும் சொல்வார்கள்.

முக்கியமாக ஆளும் தரப்பும் அதற்கு சார்பானவர்களும் அந்த நடவடிக்கைகளை எடுக்கும் பொழுது அந்த நடவடிக்கைகளின் பின்புலத்தை மக்களுக்கு விளக்கி அந்த நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டியது போராடும் மக்களின் தலைமையின் கடமையாக இருக்க வேண்டும். அத்துடன் அந்த அகவய பிரச்சனை தொடர்பாக இருக்கும் கொள்கை என்ன, அதனை தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய முற்போக்கு வேலைத்திட்டம் என்ன என்பதையும் மக்களுக்கு தெளிவாக்க வேண்டும்.

ஈழத்தில் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் உண்மையான பிரச்சனையை ஆய்வு செய்ய வேண்டுமானால் அவர்கள் இன்று எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனை என்ன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதனூடாக அவர்கள் முன்னெடுக்க வேண்டிய போராட்டம் என்ன என்பதற்கான சரியான பார்வையை நாம் எடுத்துக் கொள்ள முடியும். அதற்கான ஆய்வுகள் எதுவும் இன்று முன்னெடுக்கப்படவில்லை.

ஒடுக்கப்பட்ட சாதி மக்கள், பெண்கள், ஏழைத் தொழிலாளிகள், மாற்றுத் திறனாளிகள், குயர் (queer) மக்கள் என பல பிரிவுகளை உள்ளடக்கிய சமூகத்தில் ஒவ்வொரு சமூகத்தினரும் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகள் வேறு வேறானவை. அந்த அடிப்படைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்குத்தான் அவர்கள் முதலில் போராட முன்வருவார்கள். அதேவேளை ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சனையாக இன்னுமொன்று இருக்கும். ஒரு சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனையை தீர்க்கும் போராட்டத்திற்கும் அச்சமூகத்தின் அங்கங்களாக இருப்பவர்களுக்கு இருக்கும் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக போராட்டத்திற்கும் இடையில் ஓர் உரையாடல் நடத்தப்பட வேண்டும்.

அந்த உரையாடல் ஊடாக சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான போராட்டத்தில் தமது நலன்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அச்சமூகத்தின் அங்கங்களாக இருக்கும் பிரிவுகளும் நம்பும் பட்சத்தில் மட்டுமே அந்த மக்கள் ஒட்டுமொத்த சமூகத்திற்காக போராட முன்வருவார்கள். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அச்சமூகம் பிளவுபட்டுப் போவதும், எதிரியின் சதிக்கு பலியாகிப் போவதும், போராட்டம் தோல்வியடைவதும் தவிர்க்க முடியாதவை.

ஆயுதமேந்திய தேச விடுதலைப் போராட்டம் ஈழத்தின் சாதியத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. அதற்கு முன்னர் அரசியற் கட்சிகள் எதுவும் செய்து இருக்காதபடி சாதியத்தின் கொம்புகளைப் பற்றி அதனை முடக்கிப் போட்டிருந்தது ஆயுதப் போராட்டம். முன்னெப்போதும் இல்லாதபடி சாதியத்தை உடைப்பதற்கான சட்ட அலகுகளை நிழல் அரசாங்கம் உருவாக்கி இருந்தது. வெளிப்படையாக சாதியத்தை ஆதரித்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஒரு சமூக மாற்றத்துக்கான அத்திவாரங்களை அன்று இருந்த அரசியல் அதிகாரம் உருவாக்கி இருந்தது.

அந்த மாற்றங்களின் பின்னர் உள்ள இன்றைய நிலைமையில் சாதியத்தின் இருப்பு மற்றும் அந்த இருப்பால் ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன என்பதற்கான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். அந்த ஆய்வுகளின் அடிப்படையிலேய சாதியப் பிரச்சனை பேசப்பட வேண்டும். கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். அதனை இன்றைய அரசியற் தலைமைகள் செய்யாமல் விட்டது ஓர் அபாக்கியமான நிலைமை.

சாதியம் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டு அதன் இன்றைய நிலைமை என்ன என்பதற்கான ஆய்வுகளை தொடர்ச்சியாக

முன்னெடுக்க வேண்டியது போராடும் மக்களின் தலைமையின் கடமை. அந்த ஆய்வுகளின் ஊடாக அந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கான கொள்கைகளை உருவாக்குவதும், வேலைத்திட்டத்தை உருவாக்குவதும் இருக்கும் வேலைத்திட்டத்தை மாற்றிக் கொள்வதும் இன்றியமையாதது. அப்படியான வேலைத்திட்டம் இல்லாமலிருக்கும் பட்சத்தில் அல்லது இருக்கும் வேலைத்திட்டத்தை காலத்துக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள மறுக்கும் பட்சத்தில் அல்லது அந்த வேலைத்திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்லாமல் இருக்கும் பட்சத்தில் மக்கள் சதிகளுக்கு பலியாவார்கள். இன்று நடப்பதைப் பார்க்கும் போது சதிகார்கள் வெற்றியடைந்து வருவதாகவே படுகிறது. இதற்கு சில இடதுசாரிகளும் பலியாகிப் போவது தான் அபாக்கியம்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் தேசத்தின் அங்கங்களாக உள்ள பல்வேறு பிரிவினரின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான கொள்கைத் திட்டம் ஒன்றை முன்வைக்கவில்லை. அதனூடாக அந்த அங்கத்துவ சமூகங்களுக்கு அவர்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன, அவற்றுக்கான தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையை அந்தக் கட்சிகள் ஏற்படுத்தவில்லை. இந்த பெருந்தவறை கட்சிகள் திருத்திக் கொள்ளாவிட்டால் எமது போராட்டம் வெற்றி பெறப் போவதில்லை.

சாதியம் இன்று மெல்ல மெல்ல அழிந்து வருவதாக சொல்லப்பட்டாலும், அதனை உறுதி செய்வதற்கான தரவுகள் எம்மிடையே இல்லை. சாதியம் பற்றி மக்கள் வெளிப்படையாக பேசுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அப்படிப் பேசக்கூடிய அளவுக்கு ஒரு வெளியை எமது சமூகம் ஏற்படுத்தி இருக்கிறதா என்று ஆராய வேண்டும். ஒடுக்கப்பட்ட சாதியை சேர்ந்த மக்கள் இன்னமும் தமது சாதி வெளியே தெரிந்தால் தமக்குரிய மரியாதை கிடைக்காது என்று மனப்பாங்கிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கையில் அம்மக்கள் தமது சாதி வெளியே தெரிந்தாலும் சமூகத்தில் தமது அந்தஸ்து குறையப் போவதில்லை என்று எண்ணும் அளவுக்கான நிலைமையை எமது சமூகம் இன்னமும் உருவாக்கவில்லை. இந்தப் பிரச்சனை ஒரு முக்கியமாக தீர்க்கப்பட வேண்டிய அகவயமான பிரச்சனை.

> **தமிழ்த் தேசியக் கட்சிகள் சாதியம் பற்றி தமது கோட்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் பகிரங்கமாக முன்வைக்காத நிலைமையை தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகள் பயன் படுத்திக் கொள்கின்றன**

அதேவேளை உயர்ந்த சாதியினர் என்று சொல்லப்படுபவர்கள் தீண்டாமை என்ற அகவயமான மனப்பாங்கை கொண்டிருப்பதை மறுக்க முடியாது. ஒடுக்கப்பட்ட சாதியினர் கல்வியில், பொருளாதாரத்தில் இன்ன பிறவிடயங்களில் எல்லாம் தமக்கு சமமாக இருந்தாலும் அவர்களுடன் குடும்பச் சடங்குகளில், கோயில் சடங்குகளில் ஒரே தரப்பாக கலந்து கொள்ளும் மனப்பான்மை உயர்ந்த சாதியினர் என்று சொல்பவர்களிடத்தில் இல்லை. இது ஓர் அறிவியல் சார்ந்த பிரச்சனை. இதனைப் பொருளாதார வளர்ச்சியால் தீர்த்து விட முடியாது. இதனைத் தீர்ப்பதற்கான சமூக அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டங்கள், உதாரணமாக கல்வித் திட்டங்கள், வகுக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சாதியம் பற்றி தமது கோட்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் பகிரங்கமாக முன்வைக்காத நிலைமையை தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகள் பயன் படுத்திக் கொள்கின்றன. “சாதியத்துக்கு எதிராக தேசியக் கட்சிகள் போராடவில்லை, தாம் தான் போராடுகிறோம், ஆகவே தேச விடுதலைக்கான போராட்டமே பிழையானது” என்று இட்டுக்கட்ட முற்படுகிறார்கள். தேச விடுதலை சாதிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைக்கு வழிவகுக்காது என்ற பிழையான கருத்தை முன்வைத்து தேச விடுதலையே தேவையில்லை என்று அவர்கள் வாதாடுகிறார்கள். அதன் மூலம் எமது தேச விடுதலைப் போராட்டம் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக நடத்திய பாய்ச்சல்களை பூச்சியமாக்க நினைக்கிறார்கள்.

ஒடுக்கப்படும் மக்களின் சமூக பொருளாதார வாழ்வுநிலை இன்று பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடும் நிலை உள்ளது. சில பிரதேசங்களில் சமூக ரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் கல்வி, பொருளாதாரம், விளையாட்டு, கலாசார ரீதியில் நன்கு முன்னேறி வருகிறார்கள். பாட

சாலை கல்வியில் உயர்நிலையை அடைந்து பல்கலைக்கழகத்துக்கு பலரும் செல்லும் நிலை உருவாகியுள்ளது. ஆலயங்களில் திருவிழாக் களும் பெருமெடுப்பில் இடம்பெறுகின்றன. சன சமூக நிலையங்களும் வலுவாக இயங்குகின் றன. ஆனால் இவற்றில் பல சாதிய ரீதியாக பிரிந்தே இயங்குகின்றன என்பதே உண்மை.

எமது சமூகத்தில் நிலவும் இந்த இயங்கி யல் 'சமனான ஆனால் பிரிந்த' (equal but separate) என்ற வளர்ச்சியை அடையும் போக்கிலேயே நிகழ்கின்றது. இது வளர்ச்சியே என்று பலர் வாதிட்டாலும் இது ஒட்டுமொத்த சமூக மாற்றத்தை நோக்கிய வளர்ச்சி அல்ல என்பது தெளிவு. உதாரணமாக அமெரிக்காவில் அடிமையுடைமை ஒழிக்கப்பட்ட பின்னர் கறுப்பு இனத்தவருக்கு சம உரிமை வழங்கப்பட்ட பொழு தும் அவர்கள் வெள்ளை இனத்தவரிடமிருந்து பிரித்தே வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கென தனி பாடசாலைகள், உணவகங்கள் என்று எல் லாமே பிரித்து வைக்கப்பட்டிருந்தன. பொருளா தாரம் உட்பட பல துறைகளில் அவர்கள் வெள்ளை யர்களுக்கு சமமாக அல்லது அதற்கும் மேலாக வளர்ந்து இருந்தாலும் அந்த மக்கள் தொட ர்ந்து ஒடுக்கப்பட்டே வந்தார்கள். அந்த ஒடுக்கு முறையின் விளைவுகளிலிருந்து விடுபட முடியாமல் அமெரிக்கா இன்னும் திணறிக் கொண்டிருப்பதை நாம் காணலாம்.

சில பிரதேசங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் இப்போதும் கூலி வேலைகள் உள்ளிட்ட குறைவான சம்பளம் பெறும் வேலைகளை செய்து வருகின்றனர். அவர்கள் சாதிய ஒடுக்கு முறையுடன் உழைப்புச் சுரண்டலுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தற்பொழுதுள்ள எந்த பொறிமுறையும் இவர்க ளின் வாழ்வியலை முன்னேற்ற வழிகளைக் கொண்டிருக்கவில்லை. அதாவது, கல்வியில், அரசியலில், வெளிநாடு செல்வதில், வேலை வாய்ப்பு பெறுவதில் சாதிய அடக்குமுறையை இவர்கள் இன்னமும் எதிர்கொள்கிறார்கள். தமிழ்த் தேசியக் கட்சிகளின் வேட்பாளர் தெரி வில் கூட சாதி அரசியல் பேசப்பட்டதாக அண் மையில் சர்ச்சை எழுந்திருந்தது.

சாதிய ஒடுக்குமுறை தொடர்பில் இவ்வா றான அவதானிப்புகள், தரவுகள், கருத்து கள், காரணிகள் என்பவற்றை எல்லாம் உள் ளடக்கிய ஒரு பரந்த மற்றும் ஆழமான ஆய்வு ஒன்று இன்று செய்யப்பட வேண்டும். அந்த ஆய்வின் அடிப்படையிலேயே சாதியப் பிரச்சனை கையாளப்பட வேண்டும். இந்த அகவயமான பிரச்சனையைத் தீர்க்க சமூக ஆர்வலர்கள் செய்ய வேண்டிய முக்கியமான வேலைத்திட்டமாக இதனைக் கொள்ள வேண்டும்.

**தேசத்தின் விடுதலை ஊடாக கைப்பற்றப் படும் அரசியல் அதிகாரங்கள் ஊடாக இயற்றப் படும் சட்டங்கள், எட்டப்படும் பொருளாதார வளர்ச் சிகள், அடையப்படும் அறிவியல் மாற்றங்கள் என்பவற்றின் ஊடாகவே சாதிய வேறுபாடுகள் களையப்பட முடியும். அரசியல் அதிகாரம் இல் லாமல் சமூகத்துக்குள் புரையோடிப் போயுள்ள சாதியத்தில் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று நினைப்பது பேதமை. இந்தக் கோட்பா ட்டை புரிந்து கொண்டு சாதியத்தைப் பேசு பொருள் ஆக்கி அதனை தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.**

அவ்வாறு தமிழ்த் தலைமைகள் செய்யாத பட்சத்தில் இந்தப் பிரச்சனையை பேசிக் கொண்டு மட்டும் இருப்பவர்களுக்கு சிங்கள பௌத்த பேரினவாதிகள் அரங்கு அமைத்து கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அந்த அரங் கைப் பயன்படுத்தி தமிழ் தேசத்துரோக சக்தி கள் தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற் படுத்திக் கொண்டே இருப்பார்கள். இதனை இல்லாதொழிக்க வேண்டியது தமிழ்த் தேசியத் தலைமைகளின் தலையாய பணியாக இன்று உள்ளது.

முடிவாக, ஈழத்தமிழ் சமூகத்தில் சாதி யம் இன்றும் புரையோடிப் போயுள்ள பிரச்சனை யாக இருக்கின்றது. அதற்கு எதிரான போராட்டம் தன்னிச்சையாக அச்சமூகப் பிரிவுகளிடமிருந்து மேலெழுந்து வரவேண்டும். அவர்களின் போராட் டம் ஒட்டுமொத்த சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனையாக இன்று இருக்கும் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக போராட்டத்துடன் இணை க்கப்பட வேண்டும். அதற்குரிய வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அது இன்றைய சமூக ஆர்வலர்களினது முக்கிய கடமையாக இருக் கிறது. அதற்குரிய உந்து சக்தியை வழங்க வேண் டியது அரசியற் தலைமைகளினது முக்கியமான பொறுப்பாக உள்ளது.

# கடலோனியா பொதுவாக்கெடுப்பு

## தமிழ்மக்கள் கோரும் பொதுவாக்கெடுப்பு — பகுதி 03

தொகுப்பு - லிங்கம்




ஈழத்தமிழர் கோரும் பொதுவாக்கெடுப்பு தொடர்பாக உரையாடலில் தென்சூடான் விடுதலைக்காக நடந்த பொதுவாக்கெடுப்பு பற்றி சென்ற இதழில் பார்த்தோம். மோதிக் கொண்டிருந்த இரு தரப்பினரும் ஒரு சமாதானத்தை அடைந்து அதனூடாக ஒரு இடைக்கால நிர்வாகத்தை அமைத்துக் கொண்டதையும், அந்த இடைக்கால நிர்வாகத்தின் யாப்பு தென்சூடானின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது பற்றியும் அதன் விளைவாக அங்கு ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது பற்றியும் பார்த்தோம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றிலும் ஒரு இடைக்கால நிர்வாகம் உருவாகுவதற்கான வாய்ப்பு ஒன்று 2003 ஆம் ஆண்டில் நிலவியது. அந்த சந்தர்ப்பம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலே நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின் பொழுது உருவாகியது. அந்த இடைக்கால நிர்வாகத்துக்கான வரைவை புலிகள் பிரேரித்து இருந்தனர். அதில் இடைக்கால நிர்வாகத்துக்கு என தனியான அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் பிரேரிக்கப்படவில்லை. அந்த இடைக்கால நிர்வாகம் இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தளம் அமைக்கும் நோக்கத்துடனேயே பிரேரிக்கப் பட்டிருந்ததால் அங்கு பொதுவாக்கெடுப்பு என்பது பற்றி பேசப்பட சந்தர்ப்பம் எழவில்லை. ஆனாலும், அது நடைமுறைக்கு வந்து 5 வருடங்களுக்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வு எட்டப்படாவிடில் வடக்கு கிழக்கை சேர்ந்த 8 மாவட்டங்களிலும் தேர்தல்கள் இடைக்கால நிர்வாகத்தினால் நடத்தப்படும் என்று பிரேரிக்கப்பட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கு சார்பாக செயற்பட விளைகிறார் என்று குற்றம் சாட்டி அப்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரகால நிலையை பிரகடனம் செய்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்த அதிகாரங்களை தனது கையகப்படுத்தி இந்த இடைக்கால நிர்வாகத்துக்கான எல்லா சாத்தியக்கூறுகளையும் இல்லாமல் செய்து விட்டார்.

2009 ஆம் ஆண்டு இனப்படுகொலை நடத்தி யுத்தத்தை வெற்றி கொண்டுவிட்ட சிங்கள பௌத்த பேரினவாத அரசு இடைக்கால அரசாங்கம் தொடர்பாகவோ பொதுவாக்கெடுப்பு தொடர்பாகவோ எந்த விதமான இணக்கப்பாட்டுக்கும் வரப்போவதில்லை. அப்படி வருமாறு நிர்ப்பந்திக்கக் கூடிய பலம் எதுவும் தமிழ் மக்களிடம் இப்பொழுது இல்லை. அவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் கோரும் பொதுவாக்கெடுப்பு சாத்தியம் இல்லை. ஆனால் அதற்கான சூழலை உருவாக்கக் கூடிய பலத்தை நாம் இன்னமும் இழந்து விடவில்லை. அது தொடர்பாக பின்னர் கதைப்போம். அதற்கு முன்னர், மத்திய அரசு பொதுவாக்கெடுப்புக்கு இணங்குவதற்கான சாத்தியங்கள் இல்லாத பொழுதும் ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்திய கடலோனிய (Catalonia) மக்கள் பற்றி இந்த இதழில் பார்ப்போம். தென் சூடான் போன்று சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பொதுவாக்கெடுப்பு சூழ்நிலைக்கும், தமிழ் மக்களைப் போல் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு எந்தவிதமான சாத்தியப்பாடும் இல்லாத சூழ்நிலைக்கும் இடைப்பட்ட ஒரு சூழ்நிலையை கடலான் மக்கள் கொண்டிருந்தனர்.

அந்த சூழ்நிலையை விளங்குவதற்கு ஸ்பெயின் நாட்டின் நிர்வாக அலகுகள் பற்றி தெரிந்துகொள்வது அவசியம். ஸ்பெயின் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றிய அரசியல் அமைப்பின் படி 17 சுயாட்சியுடைய சமூகங்களால் (autonomous communities) ஆன ஒரு நாடாகும். ஒரு மக்கள் கூட்டத்தின் இனம் அல்லது அவர்கள் வாழும் பிரதேசம் என்பது இந்த சமூகத்தை

தீர்மானிக்கிறது. ஒரு சுயாட்சி சமூகம் தனக்கேயுரிய பாராளுமன்றத்தையும் சட்டங்களையும் அதிகாரங்களையும் கொண்டிருக்கும். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், 17 சமூகங்களுக்கும் உரிய சுயாட்சி உரிமைகள் சமமானவை அல்ல. ஒரு இனத்தால் அடையாளப்படுத்தப்படும் ஒரு சமூகத்திற்கு கூடிய அதிகாரங்கள் இருக்கும். இந்த அதிகாரப் பகிர்வு சமனற்ற அதிகாரப் பகிர்வு (asymmetrical devolution) என்று குறிப்பிடப்படும்.

இந்த 17 சுயாட்சி சமூகங்களில் ஒன்றான கடலான் இன மக்கள் வாழும் கடலோனியா ஸ்பெயினின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 7.7 மில்லியன் மக்கள் வாழும் இப் பிரதேசம் 32,113 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவைக் கொண்டது. இச்சமூகம் 1978 ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாக தனது அதிகாரங்களை அதிகரித்து வந்தது. கல்வி, சுகாதாரம், கலாசாரம், சூழல் பாதுகாப்பு, தகவல் பரிமாற்றம், போக்குவரத்து, வர்த்தகம், உள்ளூராட்சி மற்றும் உள்ளூர் பாதுகாப்பு என்பவற்றுக்கான அதிகாரங்களை கடலோனிய பாராளுமன்றம் கொண்டிருந்தது. நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள் மட்டுமே ஒன்றிய அரசாங்கத்துடன் பகிரப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கடலோனிய பாராளுமன்றம் ஒரு புதிய அரசியலமைப்பை தனக்கென வரைந்து கொண்டது. அந்த அரசியலமைப்பில் கடலோனியா ஒரு தேசம் (nation) என்று வரித்துக் கொண்டது.

இந்த அரசியலமைப்பை எதிர்த்து மற்றைய சுயாட்சிச் சமூகங்களில் சில அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. அந்த வழக்கின் நீதிபதிகள் கடலோனியா பாராளுமன்றம் நிறைவேற்றிய அதன் புதிய அரசியலமைப்பில் பல பகுதிகள் ஸ்பெயின் அரசியலமைப்புக்கு முரணானவை என்று 2010 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கினர். அதேவேளை, அத்தீர்ப்பு கடலான் மக்களை ஒரு தேசம் என்று அங்கீகரித்தது. ஆனால் அது வரலாற்று ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மட்டுமே பொருந்தும் என்றும் அதற்கு எந்த விதமான சட்ட வலுவும் இல்லை என்று சொல்லியது. ஸ்பெயின் மட்டுமே ஒரு தேசம் என்றும் கடலோனியா தன்னை சட்டரீதியாக ஒரு தேசம் என்று அழைக்க முடியாது என்றும் சொல்லியது. அடுத்து கடலோனிய தேசிய தினமாகிய புரட்டாதி 11, 2012 இல் கடலோனியாவின் தலைநகர் பார்சலோனாவில் இடம்பெற்ற சுதந்திரத்தைக் கோரும் ஆர்ப்பாட்டத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து கடலான் மக்கள் தம்மை தேசமாக உணரும் விகிதம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. கடலோனிய அரசாங்கத்தின் கருத்துக் கணிப்பு நிறுவனம் 2011இன் பின்னர் ஒவ்வொரு வருடமும் மேற்கொண்ட கருத்துக் கணிப்புகள் கடலோனியாவின் சுதந்திரத்துக்கான கோரிக்கை வளர்ந்து வந்ததை காட்டின. மேலும் 2009 ஆண்டிலிருந்து கடலோனியாவில் அவ்வப்போது நடத்தப்பட்ட நூற்றுக் கணக்கான சட்டரீதியாக கட்டுப்படுத்தாத (non-binding) உள்ளூர் பொதுவாக்கெடுப்புகள் கடலோனியா மக்களின் சுதந்திரத்துக்கான வேணவாவை தெளிவாக வெளிப்படுத்தின. கடலோனிய அரசாங்கத்தால் 2016 ஆம் ஆண்டு பங்குனி நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 57.2% ஆன மக்கள் சுதந்திரத்தை விரும்பி இருந்தனர்.

'கடலோனியா சுதந்திரம் அடைந்த நாடாக வரவேண்டுமா?' என்ற கேள்வியை கடலோனிய மக்களிடம் கேட்கும் பொதுவாக்கெடுப்பு ஒன்று 2017 ஐப்பசி மாதம் முதலாம் திகதி நடத்தப்பட வேண்டும் என்ற சட்டமூலம் அதே ஆண்டு புரட்டாதி மாதம் 6-7 ஆகிய திகதிகளில் கடலோனிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மேலும் இந்த வாக்கெடுப்பில் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதில்களில் எந்தப் பதில் பெரும்பான்மை பெறுகிறதோ அந்தப் பதில் சட்டமாக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் மற்றைய நாடுகளில் நடக்கும் பொதுவாக்கெடுப்பு போல் அல்லாது அந்த பொதுவாக்கெடுப்பில் ஆகக் குறைந்தது இவ்வளவு மக்கள் பங்குபற்ற வேண்டும் என்று இந்த சட்டமூலத்தில் சொல்லப்படவில்லை.

இந்த சட்டமூலம் தேசியவாதிகளால் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது, அதனை விவாதிக்க தமக்கு போதியளவு நேரம் தரப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் வாதிட்டன. முக்கியமாக ஸ்பெயினின் அரசியலமைப்பை மீறுகின்றதும் கடலோனியாவின் சுயாட்சி அரசியலமைப்பை மாற்றுகின்றதுமான ஒரு சட்டமூலம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாமல் நிறைவேற்றப்பட்டதை அவை எதிர்த்தன. இது தொடர்பாக ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தன.

அதேவேளை, பிரதம மந்திரி மரியானோ றஹோய் தலைமையிலான மக்கள் கட்சியின் (People's Party) கட்டுப்பாட்டில் இருந்த மத்திய அரசாங்கமும் இந்த சட்டமூலத்துக்கு எதிராக அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்தது. அந்த நீதிமன்றம் இது தொடர்பாக தீர்ப்பு வழங்கும் வரை கடலோனியாவில் பொதுவாக்

கெடுப்பு இடைநிறுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆயினும், நீதிமன்ற உத்தரவை மீறி பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் என்று கடலோனிய அரசாங்கம் அறிவித்தது. அந்த அறிவிப்பு வந்த 2 நாட்களுக்குள் கடலோனியாவின் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் (74%) பொதுவாக்கெடுப்புக்கு தேவையான வாக்குச் சாவடிகள் உட்பட எல்லாவிதமான உதவிகளையும் வழங்குவதற்கு உறுதியளித்தன.

இதனையடுத்து மத்திய அரசாங்கத்தால் அதனது பாதுகாப்பு படைகள் கடலோனியாவில் இறக்கி விடப்பட்டன. உள்ளூராட்சி சபைகள் பொதுவாக்கெடுப்பு வேலைகளில் ஈடுபடுவது தடுக்கப்பட்டது. அப்படி ஈடுபட்டால் அவர்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதாக கூறி தளை செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று மிரட்டப்பட்டனர். உள்ளூராட்சி சபை தலைவர்கள் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படாது என்று அறிவிக்குமாறு வற்புறுத்தப்பட்டனர். அதே சமயம், கடலோனியாவின் ஜனாதிபதி Carles Puigdemont, துணைத் தலைவர் Oriol Junqueras, பாராளுமன்ற சபாநாயகர் Carme Forcadell உட்பட முழு கடலான் அரசாங்கமும், பாராளுமன்ற அதிகாரிகளும் பொதுவாக்கெடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் வாக்களிக்க அனுமதித்தமை, பொது நிதியை தவறாகப் பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டனர். மத்திய அரசின் வழக்கறிஞர்களால் சுமத்தப்பட்ட இந்த குற்றவியல் புகார்களை கடலோனியாவின் உயர் நீதிமன்றம் விசாரிக்க ஒப்புக்கொண்டது.

அந்நீதிமன்றம் பொதுவாக்கெடுப்புக்கு பொதுச் சொத்துகள் பயன்படுத்துவதைத் தடுக்குமாறு கடலோனிய காவல்துறைக்கு உத்தரவிட்டது. இருப்பினும் திட்டமிட்டவாறு ஐப்பசி 1, 2017 அன்று பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடலோனிய காவல்துறை செயலாற்றாமல் இருந்து வாக்குச் சாவடிகளை திறக்க அனுமதித்தது. அதனையடுத்து தேசிய காவல்படையினர் தலையிட்டு வாக்குச்சாவடிகளை நீக்க முற்பட்டனர். பல இடங்களிலும் நடந்த மோதலில் பொதுமக்கள் பலரும் தேசிய காவல்படையினரும் காயங்களுக்கு உள்ளாகினர். தேசிய பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளை சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்கள் வலுவாக கண்டித்தன.

தடைகளையும் மீறி 43% ஆன மக்கள் பொதுவாக்கெடுப்பில் வாக்களித்தனர். அவர்களில் 90% ஆனவர்கள் கடலோனியாவின் சுதந்திரத்துக்கு ‘ஆம்’ என்று வாக்களித்து இருந்தனர். பெருந்தொகையான மக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதவாறு தேசிய காவல் படையால் தடுக்கப்பட்டனர் என்று கடலோனிய அரசாங்கம் குற்றம் சுமத்தியது. அதேவேளை கடலோனியாவின் சுதந்திரத்துக்கு எதிரானவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த பொதுவாக்கெடுப்பில் பங்கேற்பதன் மூலம் அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதற்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்க வேண்டாம் என்று கடலோனியாவின் சுதந்திரத்தை எதிர்த்த கட்சிகள் அவர்களை கேட்டிருந்தன.

2017 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆம் நாள் கடலோனியாவின் பாராளுமன்றம் தாம் சுதந்திரமடைந்து விட்டதாக அறிவித்தது. இந்த அறிவிப்பு ஒரு குறியீடாகவே அமைந்தது. ஸ்பெயினின் மத்திய அரசாங்கம் கடலோனியாவின் அரசாங்கத்தை கலைத்து அதனை தன்னுடைய நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. 2017 மார்கழி 21 இல் புதிய அரசாங்கத்துக்கு தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவித்தது. இதனையடுத்து கடலோனிய சனாதிபதி Carles Puigdemont பெல்ஜியத்துக்கு தப்பியோடினார். உப சனாதிபதியாக இருந்த Oriol Junqueras சிறையில் அடைக்கப்பட்டார். 2018 வைகாசி 17 ஆம் திகதி கடலோனியாவின் புதிய சனாதிபதியாக Quim Torra பதவியேற்றார்.

இந்த பொதுவாக்கெடுப்பை ஏற்பாடு செய்த பல கடலான் அரசியல் தலைவர்களுக்கு ஸ்பெயினின் உச்ச நீதிமன்றம் 14 அக்டோபர் 2019 அன்று தண்டனை விதித்தது. தேசத்துரோகம் முதல் பொது நிதியை தவறாகப் பயன்படுத்துதல் வரையிலான குற்றச்சாட்டுகளில் 9 முதல் 13 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த முடிவு கடலோனியாவைச் சுற்றி ஆர்ப்பாட்டங்களைத் தூண்டியது. பின்னர் அவர்கள் ஸ்பெயின் அரசாங்கத்தால் மன்னிக்கப்பட்டு ஜூன் 2021 இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

தென்சூடானில் நடந்த பொதுவாக்கெடுப்பிலிருந்தும் கடலோனியாவில் நடந்த பொதுவாக்கெடுப்பிலிருந்தும் ஈழத்தமிழர் பல பாடங்களை கற்றுக் கொள்ளலாம். அப்பாடங்களிலிருந்து எமது சூழலுக்குப் பொருத்தமான வழியை நாம் தேடிக் கொள்ள வேண்டும். அந்த வழிகளில் ஒன்றாக அமையக் கூடிய ஒன்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

**அடுத்த இதழில் தொடரும்...**

(24ஆம் பக்க தொடர்ச்சி)

பல இடங்களிலும் புத்தர் சிலைகளையும் சிறிய பௌத்த கோவில்களையும் நிறுவி இருக்கின்றார்கள்.

இங்குள்ள பாணமுரே திலகவன்ச நாயக்க தேரர் பௌத்தமயமாக்கலின் பிரதானமானவ ராக இருக்கின்றார். இவர் வடக்கு கிழக்கு பௌத்த மகா சங்கத்தின் தலைவராகவும் அறி யப்படுகின்றார். அதே போன்று கோட்டாபய ராஜபக்ச நியமித்திருந்த கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராகவும் கடமையாற்றி இருந்தார். அண்மையில் பொன் மலைக்குடா பகுதியில் காணி அபகரிப்புக்காக தமிழ் முஸ்லீம் மக்களை அச்சுறுத்திய சிங் கள காடையர்களுக்கு மேற்படி பிக்கு தான் தலைமை தாங்கி இருந்தார்.


இந்த பிக்கு தலைமையிலான குழுவினர் புல்மோட்டை, அரிசிமலை, தென்னவன்மரவடி என குச்சவெளி பிரதேச செயலக பகுதிகளை சிங்களமயமாக்குவதற்கே முயற்சித்து வருகின் றனர். சிங்கள குடியேற்றம், நிரந்தர இராணுவ முகாம்கள் மற்றும் பௌத்த விகாரைகள் என பல வகைகளிலும் இந்த முயற்சி நடந்து வருகிறது. தென்னவன்மரவடியில் இருந்து புல்மோட்டை செல்லும் வீதியில் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் மாலனூர், ஏறமாடு ஆகிய இரண்டு தமிழ் கிராமங்களில் சிங்கள குடியேற்றத்திட் டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏற்க னவே சிங்கள குடியேற்றவாசிகள் தற்காலிக குடியேற்றங்களை உருவாக்கி அங்கு குடியேறி இருக்கிறார்கள். பௌத்த பிக்குகளின் ஆதர வில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்புடன் வீடமைப்பு அதிகார சபையால் நிரந்தர வீடமைப்பு திட்டம் அங்கு உருவாக்கப் பட்டிருக்கிறது.

அத்துடன் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தென்னவன்மரவடி எனும் பழமை யான தமிழ் கிராமத்தில் பல நீண்ட காலமாக இருந்து வந்த கந்தசுவாமி மலை முருகன் ஆல யம் தொல்பொருள் திணைக்களத்தினால் அபக ரிக்கப்பட்டுள்ளது. கந்தசுவாமி மலை முருகன் ஆலயத்தில் வழிபட தடை விதிக்கப்பட்டு இரு க்கிறது. அப்பகுதியிலும் புத்தர் சிலைகள், பௌத்த விகாரைகள், தியான மண்டபங்கள் என பாரியளவிலான பௌத்த மயமாக்கல் முயற்சிகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக திருகோணமலை மாவட்டத்தி னுடைய தமிழர்களின் இருப்பினை மற்றும் பழமையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரும் பாலான பகுதிகள் ஒவ்வொன்றாகவும், ஒரே நேரத்திலும் அபகரிக்கப்படுகின்றன. அப்பகுதிக ளில் பௌத்த மயமாக்கல் தலைவிரித்தாடுவ தற்கு உறுதுணையாக தொல்லியல் திணைக்க ளம் இருந்து வருகின்றது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெரும்பாலான நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக ஒன்றும் செய்யாமல் இருக்கின்றனர்.

# ஈழத் தலைநகரில் தலைவிரித்தாடும் பௌத்த மயமாக்கல்

பரத்





தமிழரின் தலைநகர் என சிறப்பிக்கப்படும் திருகோணமலை மாவட்டமானது சிங்களவர்களால் ஒருபுறமும், முஸ்லீம் இனத்தவர்களால் மறுபுறமும் என நசுக்கப்படுகிறது. பெருமெடுப்பில் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழர்களின் எண்ணிக்கையும் தமிழர்களுடைய இடங்களும் குறைவடைந்து செல்கின்றன. எங்கு பார்த்தாலும் தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வையில் தமிழர்களினுடைய இடங்கள் சூறையாடப்பட்டு கொண்டு வருகின்றன.

அந்த வரிசையில் திருகோணமலையிலுள்ள அரிசிமலை என்கிற தமிழ் பேசும் மக்களின் பிரதேசம் யுத்தம் முடிந்த நாள் முதல் பௌத்த மயமாக்கலை எதிர்கொண்டு வருகின்றது. இப்பகுதியில் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள ஆசிரி கந்த புராண ராஜ மஹா விகாரைக்கான அடிக்கல் மஹிந்த ராஜபக்ச அதிகாரத்தில் நாட்டப்பட்டு இருந்தது. அதே போல ஐந்நூறு ஏக்கர் காணி அரசாங்கத்தால் பௌத்த பிக்குகளுக்கு இங்கு வழங்கப்பட்டு இருந்தது. நல்லாட்சி காலத்திலும் இருபத்தைந்து ஏக்கர் காணி பௌத்த பிக்குகளின் தேவைக்கென வழங்கப்பட்டு இருந்தது.

அரிசிமலையிலுள்ள ஐந்நூறு ஏக்கர் காட்டு பகுதியும் பௌத்த தொல்லியலுக்குரிய இட மாக பிரகடனம் செய்யப்பட்டு இருக்கின்றது. பௌத்த பிக்குகள் தவிர சாதாரண மக்கள் இப்பகுதியை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டு இருக்கின்றது. இப்பகுதி எங்கும் புத்த துறவிகளுக்கானது என்றும் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டு இருக்கிறது. இங்கு பிக்குகளுக்கான தியான மண்டபங்கள், வாழ்விடங்கள் உட்பட பல அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதே போன்று அரிசிமலை கடற்கரையின் தென்மேற்கே உள்ள காட்டு பகுதியில் கூட புத்த கோவில் ஒன்றை நிறுவி இருக்கிறார்கள். இது மட்டுமல்லாது இப் பகுதியை சூழ

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.05.2023 அன்று வெளியீடப்பட்டது.